UDUPPIDDY AMERICAN MISSION COLLEGE

&

GIRLS' COLLEGE P.P.A

SWITZERLAND

# சுவிஸ் வானவில் 2010






PALMYRA
பல்மேறா
Cunsulting & Translation
ஆலோசனை & மொழிபெயர்ப்பு
V.RATNAKUMAR
Seebahnstrasse 85
8003 Zurich
Tel : 044 / 451 62 22
079 / 311 55 29
Fax : 044 / 451 62 23
079 / 669 11 06
E-Mail : palmyra@gmx.ch , tamilberatung@gmx.com
ஆங்கில, தமிழ் மற்றும் கணித வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

# சுவிஸ்

# வானவில்

# 2010

**19.06.2010**

## உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
## கல்லூரிக் கீதம்

இராகம்: கல்யாணி                    தாளம்: ஆதி

### பல்லவி

வாழிய வாழிய வாழியவே உடுப்பிட்டி
அமெரிக்கன் மிஷன் கல்லூரி
- வாழிய

### அனுபல்லவி

ஏழிசை போலவும் இன்றமிழ் போலவும்
இசைபல திசைதொறும் இசைவுற
- வாழிய

### சரணம்

ஓது கலைத்துறை யோடுவிஞ் ஞானமும்
ஓங்கு முயிர்நலந் தாங்குமெய்ஞ் ஞானமும்
நாத இசையொடு நங்கள் சமூகமும்
நாடும் வளம்பெறப் பீடும் பெருக்கி
- வாழிய

உத்தம ஒழுக்கமும் உண்மை விழுப்பமும்
உயிரினும் மேலாய் உன்னு தகவதும்
சுத்த மனத்தொடு தொண்டுசெய் ஊக்கமும்
சோம்புலில் லாவுழைப் போம்பலும் பெருக்கி
- வாழிய

தன்னலம் நீக்கி இன்னலைப் போக்கித்
தாயத்திரு நாட்டினுக் காய்த்தினம் வாழ்ந்திடும்
உன்னத வீரரை ஒய்விலா தாக்கி
ஊழிதொ றூழி ஊழிதொ றூழி
- வாழிய

**ஆக்கம்:**

**உடுப்பிட்டி மணிப்புலவர் : காங்கேசு நீலகண்டன்**

## உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
## கல்லூரிக் கீதம்

இராகம்: சிந்துபைரவி                    தாளம்: ஆதி

### பல்லவி

எங்களது கல்லூரி வாழ்க, உடுப்பிட்டிப்
பெண்களது கல்லூரி வாழ்க, வாழ்க
எங்களது கல்லூரி வாழ்க

### சரணங்கள்

சீலம் செழிக்கும் உயர் தெய்வ சிந்தனையோடு
ஞாலம் புகழ் கற்பு நாற்குண நலங்களும்
காலம் கடந்து வளர் கலைகளும் பயிலவே
கருணையே அவதாரமாய் வந்த கடவுளே
- எங்களது கல்லூரி வாழ்க.

நல்லார் இணக்கமொடு நற்போத ஞானமும்
சொல்லிலே வாய்மையும் தூய்மை பொலி சாந்தமும்
எல்லா அறங்களிலும் ஏற்றமும் வளரவே
இறைவனின் திருநாமம் இதயத்தில் மிளிரவே
- எங்களது கல்லூரி வாழ்க.

ஆனந்த மயமான அன்பு நிறை சூழலில்
ஆகில குலசிறு மணிகள் அனைவோரும் இசைவுகொள
எளிமைபுணர் இளமை செறிகலைகள் அழகுவிரி
ஒளியெங்கணும் காண ஒளியையே ஈகின்ற
- எங்களது கல்லூரி வாழ்க.

# தலைவியின் வாழ்த்துச் செய்தி




உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் சுவிற்ஸலாந்து கிளையின் 2010ல் 'வானவில்' வண்ணக் கலைவிழாக் கொண்டாட்டம் எங்கள் எல்லோருக்கும் பெருமகிழ்ச்சியைத் தருகிறது.

பல ஆண்டுகளுக்கு முன் எங்களை உற்சாகப்படுத்தி கல்வியிலும் கலைகளிலும் விளையாட்டு உட்பட ஏனைய துறைகளிலும் ஈடுபட வைத்த அதிபர்கள், ஆசிரியர்களை நினைவு கூர்ந்து அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்து, பணிகளைத் தொடரும் ஆசிரிய மணிகளுக்கு பாராட்டுகள் தெரிவித்து, எங்களை உருவாக்கிய கல்விக் கூடங்களில் உருவாகும் நாளைய சந்ததியினருக்கு நல்வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

பிறந்த மண்ணின் கல்லூரி வளர்ச்சிக்கும் பிறநாடுகளில் நமது கலைகளின் வளர்ச்சிக்கும் 'வானவில்' பங்களிப்பு நல்கிட வாழ்த்துக்கள்.

**நந்திமலர் தர்மகுலசிங்கம்**
**தலைவி**
**உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி**
**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம்**
**சுவிற்ஸலாந்து.**

# செயலாளரின் செய்தி



உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் ஆண்கள் பாடசாலை, உடுப்பிட்டி பெண்கள் பாடசாலை ஆகியவற்றின் புலம்பெயர் பழையமாணவர்கள் தமது பாடசாலைக்காற்றிய பங்களிப்பு அளப்பரியது.

எமது நாட்டின் அரசியல் காரணங்களால் தமது சொந்த தாய்நாட்டை விட்டு பல ஆண்டு காலம் பிரிந்து வாழும் எமது பழையமாணவர்கள் தாம் சிறுவயதில் இருந்து கல்வி பயின்றுவந்த தமது பாடசாலையின் வளர்ச்சிக்கு தம்மால் முடிந்த பங்களிப்பினை மனமுவந்து செய்ய முன்வரவேண்டும் என்பது எனது பணிவான வேண்டுதலாகும்.

ஒரு நாடும் ஓர் இனமும் முன்னேற்றம் அடைய வேண்டும் என்றால் அந்தநாட்டில் உள்ள மக்கள் சிறந்த கல்வி உடையவர்களாக திகழவேண்டும் அந்தவகையில் பாடசாலைகள் சிறந்த தரத்துடன் இருப்பதற்கு எம்மால் முடிந்த பங்களிப்பினை புலம்பெயர் பழைய மாணவர்கள் மனமுவந்து செய்ய வேண்டும்.

எமது நாடு அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் ஒன்றாகும் இந்தவகையில் எமது நாட்டுமக்களின் பெரும்பாலான தேவைகளை பூர்த்திசெய்வதற்கு ஏதாவது ஒரு வெளிநாட்டின் உதவியினை அல்லது வெளிநாட்டு உதவி நிறுவனங்களின் உதவியை நம்பியிருக்க வேண்டிய நிலையில் உள்ளது. இந்நிலையில் எமது நாட்டில் உள்ள பாடசாலைகளுக்குத் தேவையான அனைத்து தேவைகளையும் அந்த அரசால் பூர்த்தி செய்ய முடியும் என்பது இயலாதகாரியமாகும். இந்த வகையில் புலம்பெயர் வாழ் எமது பழைய மாணவர்கள் எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு தங்களால் முடிந்த அதிகபட்ச உதவியினை செய்ய முன்வரவேண்டும்.

மேற்குறிப்பிட்ட விடயங்களைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு பழைய மாணவனும் செயற்பட்டால் எமது பாடசாலை நல்ல வளர்ச்சியினைப் பெற்று எமது நாட்டிலே சிறந்த பாடசாலையாகவும் அதேநேரம் ஓர் எடுத்துக்காட்டான பாடசாலையாகத் திகழும் என்பதில் சந்தேகம் இல்லை. தற்சமயம் எமது பாடசாலைகளுக்கு கல்வி, மருத்துவம், குடிநீர், விளையாட்டு போன்றவற்றை சீர்செய்வதற்கு நிறைய தேவை இருப்பதாக அறிந்துள்ளேன். ஒவ்வொரு புலம்பெயர் எமது பழைய மாணவர்கள் தம்மால் இயன்ற அதிகபட்ச பங்களிப்பினை செய்யமுன்வர வேண்டும் என்பது எனது அன்பான வேண்டுகோள் ஆகும்

குழந்தைவேலு ஜெயசீலன்
செயலாளர், பழைய மாணவர் சங்கம்,
சுவிற்ஸலாந்து.



உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்க செயற்குழு
சுவிற்ஸலாந்து கிளை 2010

# என் நினைவில் கல்லூரி



எமது வாழ்க்கையில் எவ்வளவோ மறக்கமுடியாத நிகழ்வுகள் இருக்கின்றன. ஆயினும் எம் குழந்தைப்பருவ, இளமைப் பருவ கால நினைவுகள் பசுமரத்தாணி போல பதிந்துள்ளன. அவற்றிலும் பாடசாலைக் காலங்கள் மறக்கமுடியாதவை.

ஒருதாய் தனது குழந்தையின் ஒவ்வொரு செயலையும் நினைத்துப் பார்ப்பதைப்போல நானும் எனது பாடசாலைக் காலத்தை நினைத்துப்பார்க்கிறேன். முதன் முதலில் ''அ'' சொல்லிக் கொடுத்த அன்னையைப் போல ஆரம்பக்கல்வியை ஊட்டி அஸ்திவாரத்தையே போட்ட எனது ஆசிரியை திருமதி பாக்கியம் அவர்களை ஒருபோதும் என்னால் மறக்கமுடியாது. அத்துடன் எனது ஆரம்ப கல்வியை புகட்டிய திரு.தியாகராசா ஆசிரியர், திரு. நாகலிங்கம் ஆசிரியர் அவர்களையும் மறக்கமுடியாது.

இடை நிலைக் கல்வியை கற்கும் போது நாம் செய்த குறும்புகளை அன்புடன் கண்டித்தும் நல்வழிப்படுத்தியும் அறிவை ஊட்டிய செல்வி. துரைச்சாமி ஆசிரியை, திரு. தங்கவடிவேல் ஆசிரியர், தாய்மொழியைப் புகட்டிய திரு. முத்துவேல் ஆசிரியர் அவர்களையும் ''அந்நியமொழி ஆங்கிலத்தைப் படியுங்கோ எங்கு சென்றாலும் வாழலாம்'' என்று கூறி ஆங்கிலத்தைப் போதித்த திரு விநாயகமூர்த்தி ஆசிரியர் அவர்களையும் நினைத்துப்பார்க்கின்றேன்.

உயர் கல்வியைக் கற்கும் போது கணணித்துறையில் படிப்பித்த ஆசிரியர்கள் திரு. தில்லையம்பலம், திரு. சண்முகலிங்கம். திரு.பொன்னம்பலம் ஆகியோரையும் அவர்கள் கூறிய அறிவுரைகளையும் இன்றும் அசைபோட்டுப் பார்க்கிறேன்.

எமது கல்லூரிக் கீதமே வாழிய வாழிய என்ற வாழ்த்துடனேயே தொடங்குகின்றது. அதேபோலே எமது கல்லூரி ஆசிரியர்களும் எம்மை வாழிய வாழிய என்று வாழ்த்தியதனாலேயே நாம் வெவ்வேறு நாடுகளிலும் பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்குகிறோம். வானவில்லின் மூலம் எமது பாடசாலை மிளிர என்னால் ஆன உதவியைச் செய்வேன்.

**நன்றி மறப்பது நன்றன்று.**

**ந.புஸ்பராஜா**
**பொருளாளர்,**
**கல்லூரி பழைய மாணவன்**
**சுவிற்ஸலாந்து.**

# உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி



ஈழத்தில் சிந்திய குருதியையும் கண்ணீரையும் உங்கள் வியர்வையினால் துடைத்தழிக்க முயன்ற உன்னத உறவுகளே! கலாசாரம், தொழில்நுட்பம், வர்த்தகம் அறிவுசார் சொத்துடமை என்ற பல்வேறு பரிமாணங்களில் நம் தேசத்தின் மீதான மேலைத்தேய சுரண்டல் கட்டவிழ்த்து விடப்பட்டபோதும், புலம்பெயர் தேச உறவுகளின் இறுக்கமே எங்களின் காப்பரணாக அமைந்து எமது வாழ்வை ஒளி நோக்கி நகர்த்தியது. தாயகத்தின் மீதான பற்றுறுதியை வெவ்வேறு தளங்களில் வெளிப்படுத்தும் வேணவாக்கண்டு இதயம் பெருமிதம் கொள்கிறது. உறக்கத்திலும் மறவாத குஞ்சுகளின் உயிர்க்கீச்சிடலால் தாய்ப்பறவை கௌரவம் கொள்கிறது.

அறிவை அமுதாக அருந்திய செஞ்சோற்றுக்கடனுக்காக கல்லூரி அன்னையின் பாதங்களைப் பற்றி நிற்கும் பரிசுத்தமான உள்ளங்களின் ஒன்றிணைவை கடல் கடந்து நின்று வாழ்த்துகின்றோம். வடமராட்சி மண்ணில் யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பட்டொளி வீசிப் பிரகாசிக்கப் பின்புலமாக நீங்கள் அமைந்துள்ள நிதர்சனத்தை வரலாறு உள்வாங்கிக் கொள்ளும். பொருளாதார அழுத்தங்களுக்கு முகங்கொடுத்து சின்னாபின்னமாகிச் சிதறாது காத்த சரணாலயங்களை சரித்திரமும், கல்லூரியும் கல்வெட்டில் பொறித்திருக்கும்.

வசந்தகாலம் நோக்கிய யாத்திரையாக வானவில் தோன்றட்டும். நிறங்களின் சங்கமங்கள் நிகழ்கால இதயங்களை நிம்மதியாக வாழ வைக்கட்டும். விந்தைகளின் விளைச்சலாக விழா அமைந்து எந்தையர் நாட்டையும் எழிலாக்கட்டும் என்று கல்லூரியின் சார்பிலே வாழ்த்துகிறேன்.

க.தருமலிங்கம்
அதிபர்

### யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பழையமாணவர் சங்கத்தலைவியும், பதில் அதிபருமான திருமதி லி.நே.யோசேப் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாண மாவட்டத்திலே உடுப்பிட்டிக் கிராமத்தின் அறிவுக் கண்களாகத் திகழ்கின்ற யா/ உடுப்பிட்டிஅ.மி.கல்லூரி, யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி என்பவற்றின் பெருமையினை உலகறியச் செய்யும், சுவிஸ் பழையமாணவர் சங்கத்தின் பன்முகப்பணியினை நினைத்து மனமகிழ்வடைகின்றோம் 'ஒளியைக் கொண்டு ஒளியேற்றுவோம்' என்ற எமது பாடசாலையின் மகுடவாசகத்தை மனதில்கொண்டு, எமது பாடசாலை மாதாவுக்கு நீங்கள் செய்யும் அரும்பணிகளின் அடையாளங்கள் எம் முன்னே நிழலாடுகின்றன.

எமது பாடசாலையின் பழையமாணவர்கள் தாம் பெற்ற கல்வி அறிவை சுவிஸ் நாட்டில் பரப்பிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைந்து நாம் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம் அத்தோடு வானவில் நிகழ்ச்சியூடாக தாம் பெற்ற கல்வியறிவை வெளிப்படுத்துவது மேலும் எமக்கு மனநிறைவைத் தருகின்றது. வானவில்லின் வர்ணஜாலங்கள் உடுப்பிட்டி மண்ணில் பெற்ற கல்வியை காட்சிப்படுத்துவதாக இருக்கும் என எமது அகக்கண்கள் கண்டுகளிக்கும் என்பதில் ஐயமில்லை.

மேலும் எமது பாடசாலை மாதாவின் வரலாற்றைத் தடம்பதித்ததுடன், பாடசாலை அபிவிருத்தியில் நிலையான பற்றுறுதியுடன் செயற்பட்டுகொண்டிருக்கும் எமது பழைய மாணவர்சங்க சுவிஸ்கிளை நடாத்துகின்ற வானவில் நிகழ்வு சர்வதேசம் எங்கும் ஒளிவிட்டுப் பிரகாசிக்க வேண்டுமென எல்லாம் வல்ல ஆண்டவரை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திருமதி.லி.நே.யோசேப்**
**பதில் அதிபர்**
**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**

# பழைய மாணவர் சங்கத் தலைவரின் வாழ்த்துச் செய்தி




தாயகக் காற்றினைச் சுவாசிக்கும் வேணவாவோடு, புலம்பெயர் தேசங்களில் பொருளாதார கனவுகளை சீர்செய்து வாழும் உறவுகளை அன்னை நிலத்திலிருந்து அன்புருக நினைத்து நெகிழ்ந்து வாழ்தலே எங்களின் அன்றாட கருமங்களில் ஒன்றாகிப் போனது. இயந்திர வாழ்வும் இந்திரபோகமும் பின்னிய வாழ்வியல் முறையொன்றே உங்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது. இந்நிலையிலும் பசுமையான நினைவுகளுக்கு செங்கம்பளம் விரிக்கும் இதயத்தோடுதான் இரண்டறக் கலந்திருக்கிறீர்கள். கல்லூரிக் காலங்களே உங்கள் பசுமைகளாய் படர்கின்றன.

இதயமெங்கும் எழிற்போர்வை போர்த்திய கல்லூரி அன்னை பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்தே வாழ்ந்து வருகிறாள். கிடுகுக் கொட்டகைகளுக்குள் அமர்ந்து, மருத்துவக் கனவு காணும் மாணவர்களை நாம் அன்றாடம் தரிசிக்கின்றோம். உலகத்தின் அனைத்து முன்னேற்றங்களையும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அடுத்த கணமே அடைந்துவிட வேண்டுமென பேராசை கொள்ளவில்லை. எனினும் ஓர் நூற்றாண்டு பின்தங்கிவிடுதல் நெருடலையே தருகிறது.

பொருளாதார பலத்தினால் கல்லூரியை உயர்வடையச் செய்வதற்கு முன்பு போல அதிகமாகவே உதவிபுரியுங்கள். கல்வி வானில் எமது கல்லூரி பட்டொளி வீசி பிரகாசிக்கட்டும். கல்லூரிக் கனவுகளை இதயத்தில் சுமந்து வாழும் இனிய இதயங்களை என்றென்றும் வாழ்த்தி வணங்குகின்றேன்.

**க.சண்முகசுந்தரம்**
**தலைவர்**
பழைய மாணவர் சங்கம்
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி



வானவில் 2008 நிகழ்வில் லண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தைச் சேர்ந்த இ.இராமநாதன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகே கனடாவிலிருந்து வருகை தந்த மகாஜனாக் கல்லூரி முன்னாள் அதிபர் பொ.கனகசபாபதியையும் பழைய மாணவர் சங்கக்கிளை ஒருங்கிணைப்பாளர் அருண் யோகேந்திராவையும் காண்க.



உடுப்பிட்டி அ.மி.கல்லூரி மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்க சுவிஸ் கிளையினர் கல்லூரி கீதம் இசைக்கின்றனர்.

# International Forum
of
# UDUPPIDDY AMERICAN MISSION COLLEGE & GIRLS' COLLEGE PPA

*International Co-ordinator*
Dr. T. Vasanthakumar
*Canada*

*International Representatives:*

Mr. S. Thillainadarajah
*Sri Lanka*

Mr. S. Kanapathipillai
*Switzerland*

Mr. R. Jeyarajah
*London, UK*

Dr. S. Jeyaseelan
*Australia*

Dr. Geetha Raguparan
*United States of America*

Mrs. Selvarani Shanthakumar
*France*

Mr. V. Alagalingam
*Germany*

Mr. N. Nithiyananthan
*Norway*

Mr. T. Vijayakumar
*Newzealand*

## சர்வதேச அரங்கிலே.......



எமக்கு அறிவைப் புகட்டிய பாடசாலைகள் போரின் அனர்த்தத்தினால் தரைமட்டமாக்கப்பட்டு மாணவர்கள் தமது கல்வியை மரநிழல்களிலும், விளையாட்டு மைதானங்களிலும் தொடந்தமையை நாங்கள் இலேசில் மறந்துவிடமுடியாது. எமது கல்லூரிகளின் வளத்தையும், தரத்தையும் மீள்கட்டியெழுப்ப, அன்றைய தாய்சங்கத்தலைவராகவிருந்த பேராசிரியர் அ.துரைராஜா அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, கனடாவிலே பழையமாணவர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, சுவிஸ், இங்கிலாந்து போன்ற நாடுகளிலும் பழைய மாணவர் சங்கக் கிளைகள் உருவாக்கப்பட்டு தம் பணிகளைத் தொடர்ந்தன. இக்காலகட்டத்திலே கல்லூரிகளின் அபிவிருத்தியிலும், வளர்ச்சியிலும் தமது பங்களிப்பை நல்கி, மாணவ சமுதாயத்திற்கு உதவிட பல நாடுகளிலும் பரந்து வாழும் பழைய மாணவ மணிகளின் இணைப்பு என்பது காலத்தின் தேவையாகியது! இதன் விளைவாக, கனடாவிலே, 2005ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1ம் திகதி, அன்றைய தாய்ச்சங்கத் தலைவர் Dr.தங்கராஜா அவர்களினால் சர்வதேச பழைய மாணவர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. சர்வதேசரீதியில் கிளைச்சங்கங்களை உருவாக்கி, கிளைச்சங்கங்களுக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்தி கல்லூரிகளின் அபிவிருத்தியை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும். இதனைத் தொடர்ந்து 1989ம் ஆண்டுமுதல் கனடா வானில் தோற்றிய 'வானவில்', 2006ம் ஆண்டுமுதல் சுவிஸ் நாட்டிலும், 2007ம் ஆண்டுமுதல் லண்டன் நாட்டிலும் வருடாவருடம் வர்ண ஜாலங்களுடன் தோற்றமளிக்க ஆரம்பித்தது!

இன்று புலம் பெயர் மண்ணிலே, குறிப்பாக கனடா, சுவிஸ், லண்டன் போன்ற நாடுகளில் கல்வியினூடாக காத்திரமான சமூக அமைப்பினைக் கட்டி எழுப்பும் வேணவாவோடு, எமது பண்பாட்டு வேர்களான பாரம்பரியக் கலைகளுக்கு கௌரவம் கொடுக்கும் கருத்தியலை மனதிலிருத்தி, வானவில் வெற்றி நடைபோடுகின்றது! இது இன்னும் பல நாடுகளில் வேரூன்ற வேண்டுமென்பதே எம்முடைய பேரவா!

அண்மைக் காலங்களிலே, சுவிஸ் கிளையினருடைய வளர்ச்சி அபரிதமானது! சுவிஸ்கிளை எமது பாடசாலைகளுக்கு வழங்கிவரும் ஆதரவும், நிதி உதவிகளும் அளப்பரியன! பிரவேசச்சீட்டு எதுவுமின்றி, வானவில் நிகழ்வினை முழுநாள் நிகழ்வாக நடாத்தி, அன்பளிப்புகள், விளம்பரங்கள் மூலம் கணிசமான அளவு நிதியைத் திரட்டக் கூடிய திறமை, பிறநாட்டு விருந்தினர்களை உபசரிக்கின்ற விருந்தோம்பல் பண்பு என்பன எங்குமே கண்டிராத, சுவிஸ் கிளையினருக்கு மட்டுமே உரித்தான தனித்துவச் சிறப்புக்கள்!

கல்லூரித் தாய்க்கான கடமைகளை நெஞ்சில் சுமந்து, நிகழ்வுகளை, ஒழுங்கமைத்து, நெறிப்படுத்திவரும் சுவிஸ்கிளைச் சங்க உறுப்பினர்களின் அர்ப்பணிப்புமிக்க நடவடிக்கைகள் என்றுமே போற்றற்குரியவை. கல்லூரிக்காகவும் கலைக்காகவும் இன்று அரங்கேறும் வானவில் இன்றும் இனியும் வெற்றியையே காண வாழ்த்துகின்றேன்.

அன்புடன்

**(த.வசந்தகுமார்)**

*85, Havagal Crescent, Markham, Ontario L3P 7G6 Canada Tel: 905.415.2244*
*www.uamcollege.com, www.ugirlscollege.com Email : info@uamc.ca*

# உணர்விற்கு உரமூட்டிய என் தாய்



60ம் 70ம் ஆண்டுக்காலப் பகுதி நான் அ.மி.கல்லூரி மண்ணில் துள்ளித் திரிந்த காலம். இனிய அக்காலத்தை மறக்க முடியாத நினைவுகளோடு என் வாழ்க்கைக் காலம் அந்நிய மண்ணில் இன்று...!

கல்வியின் தரத்தில் உயர்ந்து நின்றது எங்கள் பாடசாலை.

அன்றைய கால கட்டத்தில் விளையாட்டு துறைகளிலும் கொடிகட்டிப் பறந்ததை நினைவு கூருகிறேன். சாரணீயம், காற்பந்து உட்பட மெய்வல்லுனர்ப் போட்டிகளிலும் என்னை உற்சாகப்படுத்திய என் தாய் எனக்கு அன்று நல்வழி காட்டி நின்றாள். நேசதுரை மாஸ்டர், ஜெயராஜா மாஸ்டர், றொபேட் மாஸ்டர், ஏபிரகாம் மாஸ்டர் என பலரது கண்டிப்பும் நேசமும் மிக்க ஆசான்களின் முகங்கள் என் முன் இன்றும் நிழலாடுகிறது.

செல்லத்துரை மாஸ்டர் அதிபராக இருந்த காலம் நான் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் பயின்றவன் என்பதே என்னை இன்று ஆனந்தம் கொள்ள வைக்கிறது. அன்னையின் வழிநடத்தலில் வளர்ந்த நாம் பாடசாலை காலத்தின் பின்பும் அவ் வழிநடத்தல்கள் என்னை முழுமனிதனாக்கியது. இலங்கையில் பாதுகாப்புத்துறையில் பணிபுரிந்த நான் அத்துறையில் உயர்வுகளைப் பெற்றுக் கொண்டவன். இன்றும் இந்நாட்டில் மொழி அறியா அந்நிய சூழலிலும் பல சுவிஸ் பிரஜைகள் என்னிடம் யோகாசனம் கற்க ஆவலுடன் வருகிறார்கள் என்றால் அது என் பாடசாலை எனக்கூட்டிய வல்லமையே. சுவிற்ஸலாந்தில் நான் வாழும் கிராமத்தில் பயிற்சியை மக்களுக்குக் கற்றுக் கொடுக்கக் கேட்டபோது, அந்த அன்புக் கட்டளையை ஏற்றுக் கொண்ட நான், நான் கற்றிருந்த கலையை மற்றவர்க்குக் கற்றுக் கொடுக்க கிடைத்த சந்தர்ப்பத்தை எண்ணிப் பெருமைப்படுகின்றேன். இம்முயற்சி மூலம் பெறப்படும் வருவாய் வறுமையுற்ற நாட்டு மக்களின் கல்வித்தரத்தை மேம்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது என்பது என் முயற்சியை மேலும் ஊக்கமுற வைக்கிறது. இக்கலையைக் கற்றுக்கொள்ளவும் கற்றவற்றை மற்றவர்க்குக் கற்றுக் கொடுக்கவும் மனவலிமையை ஊட்டிய என் தாய் அ.மி.கல்லூரியை சிரம்தாழ்த்தி வணங்கி நிற்கிறேன். அத்துடன் அப்பாடசாலை சிறப்புற சுவிற்ஸலாந்தில் கூடியிருக்கும் மக்களுடன் இணைந்து செயற்பட கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி என் தாயின் அரவணைப்பில் இன்றும், இன்னும் வருங்காலத்திலும் கல்வி பயிலும் மக்கள் உலகின் பல துறைகளிலும் வல்லுனர்களாக வீட்டிற்கும் நாட்டிற்கும் நன்மை பயக்கும் மாந்தர்களாக வாழ வாழ்த்தி நிற்கின்றேன்.

**சி.மகாலிங்கம்**
**போஷகர், சுவிஸ் கிளை**
**பழைய மாணவன் உடுப்பிட்டி அ.மி.கல்லூரி**

# உள்ளத்துறுதிக்கு உரமிட்டே உருவாகிய வானவில்



**1852**ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்று 158 வருட கால பணியினைப் பூர்த்தி செய்து புதுப்பொலிவுடன் நிமிர்ந்திருப்பது யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி. இதற்கிணையாக ஊரின் மத்தியில் இருப்பது யா / உடுப்பிட்டி மகளிர் கல்லூரியாகும். இவ்விரு பாடசாலைகளினதும் பழைய மாணவ மாணவிகள் இணைந்து வழங்கும் இனிய நிகழ்ச்சி 'வானவில்'.

வானவில்லின் பல நிறங்கள் போல் பலவித அனுபவங்களைப் பெற்ற நாங்கள் பாக்கியசாலிகள். சுவிற்ஸலாந்தில் வாழும் நாம் பல பொறுப்பான கைங்கரியங்களை பொறுப்புணர்வுடன் நகர்த்தக் கற்றுக் கொண்டவர்கள்.

1852இல் ஆரம்பிக்கப்பட்ட எங்கள் பாடசாலை 1908ஆம் ஆண்டில் அமெரிக்க மிஷனறி மார்களின் செல்வாக்கைப்பெற்று பாடசாலை தரமுயர்த்தப்பட்டு அமெரிக்கன் மிஷன் கல்லூரி என நாமம் பெற்றது. அக்காலத்தில் ஆங்கிலத்தை போதனா மொழியாகக் கொண்டிருந்த எம் பாடசாலை இலங்கையிலேயே பெயர் பெற்ற பாடசாலைகளில் ஒன்றாக விளங்கியது. 1939ஆம் ஆண்டிலிருந்து க.பொ.த சாதாரண வகுப்புகளைக் கொண்ட எமது பாடசாலை 1959ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர வகுப்புவரை பாட நெறிகளைக் கொண்டு முழுமையான முதற்தரப்பாடசாலையானது.

அன்றுமுதல் இன்று வரை பல ஆளுமைமிக்க கல்விமான்களை உருவாக்கி தற்போது விளையாட்டு, நூலகம், கணனித்துறை என பல துறைகளிலும் நவீன திறமைகளைப் பெற்றுள்ளது. பணவருவாயில் நடுத்தர அல்லது வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள மக்கள் சூழ்ந்திருந்த நிலமையிலும் அனைவர்க்கும் கல்வி வாய்ப்பை புகட்டும் முயற்சி அங்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அதிபர்களாலும் ஆசிரியர்களாலும் வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்றது. இவ்வித ஆசிரியர்களையும் அதிபர்களையும் கொண்டிருந்தமை பாடசாலைக்குக் கிடைத்த கொடையாகும்.

அவர்கள் பாடசாலையின் தரத்தைக் கண்ணெனப் போற்றியவர்கள். நாட்டில் ஏற்பட்ட இன்னல்களிலும் பாடசாலைகளை வளர்த்தமை குறிப்பிடத்தக்கது.

சுவிற்ஸலாந்தில் நிறுவப்பட்டிருக்கும் பழைய மாணவர் சங்கம் உடுப்பிட்டி ஆண்கள், பெண்கள் கல்லூரியின் பழைய மாணவர்களை உள்வாங்கிக் கொண்டதாகும்.

பாடசாலையின் தரத்தை உயர்த்த இச்சங்கம் திடசங்கற்பம் பூண்டுள்ளது. எங்களது இப்பணிக்கு பல பழைய மாணவர்களும் ஊர் அபிமானிகளும் இன்னும் பல பெரியார்களும் உதவி வருவது மகிழ்ச்சி அடைய வைக்கிறது. இதுபோன்ற நற்பணிகள் என்றும் தொடர வாழ்த்தி நிற்கின்றேன். வாழ்க எங்கள் கல்லூரி.

**பரம்சோதி செல்வச்சோதி**
**முன்னாள் தலைவர்,**
**உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி,**
**பெண்கள் கல்லூரி பழைய மாணவர் சங்கம்,**
**சுவிஸ்.**

# பழைய மாணவர் சங்க சர்வதேச ஒன்றிய லண்டன் பிரதிநிதியின் வாழ்த்து



சின்னஞ்சிறு பருவத்திலும் வாலிப வயதிலும் இனிமை தந்த கல்லூரிக் காலத்தை எத்தனை தடவை நினைத்தாலும் மேலும் மேலும் இன்பமே பொங்கியெழும். பொங்கிப் பெருகும் இன்பத்தில் எல்லாவற்றையும் மறந்து எங்கோ பறந்து செல்வது போன்ற உணர்வு தோன்றும்.

'வானவில்' என்ற சொல் கேட்டதும் மட்டற்ற மகிழ்ச்சியடைவோம். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பழைய மாணவர்களின் 'வானவில்' என்றால் ஆனந்தத்துக்கு அளவேயில்லை.

சுவிற்ஸலாந்தில் 'வானவில் 2010' என்றதும் இன்பத்தில் இதயம் மிதக்கின்றது. பள்ளி நினைவுகளும் ஊர் உறவு எண்ணங்களும் எல்லை தாண்டிச் செல்கின்றன. எனவே -

கலைகளால் களிப்பூட்டி, கல்லூரிகளுக்கு உதவிக்கரம் நீட்டும் 'சுவிஸ் வானவில்' சிறப்புற இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

ஜெயராசா ராசையா
ஐக்கிய இராச்சிய பிரதிநிதி
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
சர்வதேச ஒன்றியம்




வானவில் 2008 நிகழ்வில் இசை விருந்தளித்த சிறுவர்கள்.




வானவில் 2008 நிகழ்வில் வில்லிசை வழங்கிய சிறுவர்கள்.

# ஒருங்கிணைப்பாளரின் வாழ்த்துச் செய்தி



நாங்கள் படித்த அழகான கிராமத்துக் கல்லூரிகளான உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியையும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியையும் நினைத்துப் பார்ப்பதில் சுகம் கிடைக்கிறது.

பூலோகத்தின் சுவர்க்கம் என்று சொல்லப்படும் சுவிற்ஸலாந்தில் வாழ்ந்தாலும் எங்கள் கிராமங்களும் எங்களை வளர்த்த கல்லூரிகளும்தான் உண்மையான சொர்க்கம். கல்லூரிகளின் பழைய மாணவர்கள் ஒன்று கூடி இவ்வாண்டும் 'வானவில் 2010' நிகழ்ச்சியை நடத்துவது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்க சுவிற்ஸலாந்து கிளையின் முன்னாள் தலைவர் என்ற வகையில் 'வானவில்' சிறப்பாக நடைபெற வாழ்த்துக்கள் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**அருண் யோகேந்திரா**<br>
**ஒருங்கிணைப்பாளர்**<br>
**உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி,**<br>
**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம்**<br>
**சுவிற்ஸலாந்து.**

# துளிரும் எண்ணங்களுடன் துலங்கும் வானவில்




பாடசாலைக்காலம் என்றும் இனிமையான உணர்வுகளோடு ரீங்காரமிடுகின்றன. வானவில் என்றால் எனக்குள் ஒரு புத்துணர்வு. சிறுபராயம், இளமைக்காலம் என கடந்து வந்த காலங்களை எனக்குப் பயனுள்ளதாக்கி என்னை மனிதனாக்கிய என் தாய் அ.மி கல்லூரிக்கு நான் சிரம் தாழ்த்துகிறேன். அக்கல்லூரி செய்யும் மகத்தான பணி கண்டு பூரிப்படைகின்றேன். அதிபர் ஆசிரியர் ஆசிரியைகளின் பொறுப்புணர்வு மிக்க சேவையால் தான் எமது கல்லூரி பல இன்னல்கள் ஏற்பட்ட வேளையிலும் கூட இளைக்காது தளைத்து வளர்ந்துள்ளது. உலக வளர்ச்சியுடன் எமது கல்லூரியையும் பல துறைகளிலும் இணையாக முன்னேற பழைய மாணவர் சங்கங்கள் ஆற்றிவரும் பணிகள் மகத்தானவை. இந்தவகையில் சுவிற்ஸலாந்து பழைய மாணவர்கள் சங்கத்தில் எம் தாய் வளர்த்துவிட்ட முற்போக்காளர்கள் பலருடன் நானும் இணைந்து செயற்பட கிடைத்த வாய்ப்பினையிட்டு அகமகிழ்ச்சிதான்.

துள்ளித்திரிந்த துடிப்பான பருவத்தில் எம்மை வழிநடத்தி வழிகாட்டிய கல்லூரிக்கு சுவிற்ஸலாந்தில் வருடந்தோறும் விழா எடுக்கும் பாக்கியத்தைப் பெற்றவர்களாகிறோம். இதன் மூலம் நான் பிறந்த நாட்டிற்கும் ஊருக்கும் நற்பணி செய்யும் பேறைப்பெறுகிறேன். உடுப்பிட்டி அ.மி கல்லூரி ஊர் மக்களுக்கு மட்டுமல்ல அயலூர் மக்களுக்கும் அறிவு என்னும் உணவளிக்கும் கற்பகதரு. எமது பாடசாலை அ.மி.கல்லூரி. இக்கல்லூரியின் வளர்ச்சிக்கும் சுவிற்ஸலாந்து பழைய மாணவர் சங்கத்தின் பணி என்றும் தொடரட்டும்.

**- கந்தசாமி. இராதாகுமார் (மதன்)**
**ஒருங்கிணைப்பாளர்**
**பழைய மாணவர் சங்கம்.**
**சுவிற்ஸலாந்து.**

# 'சுவிஸ் வானவில்' சிறக்க வாழ்த்துகின்றேன்



நாம் பிறந்து வளர்ந்து கல்வியும் கலைகளும் பயின்ற உடுப்பிட்டிக் கிராமத்துக்கு பெருமை தரும் கல்விக்கூடங்களான உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் என்றும் எங்கள் நினைவில் நிறைந்திருக்கும்.

பெருமைக்குரிய கல்விக் கூடங்கள் உருவாக்கிய மாணவமணிகள் புலம் பெயர்ந்து வாழும் போதும் மனமெல்லாம் கல்விக் கூட நினைவுகளால் நிரம்பி வழிய, வருடந் தோறும் 'வானவில்' வண்ணக்கலைவிழாவைக் கொண்டாடி மகிழ்வதும் - அத்தொடரில் இயற்கையெழில் கொஞ்சும் சுவிற்ஸலாந்திலும் கடந்த் ஆண்டுகளைப் போல இவ்வருடமும் சிறப்பாக விழாவுக்குரிய ஏற்பாடுகள் செய்வது குறித்து செய்திகள் அறிந்து அகமிக மகிழ்கின்றேன்.

அண்மையில் படித்த கல்லூரிப் பக்கம் சென்ற போது உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்க சுவிற்ஸலாந்து கிளையின் அன்பளிப்பாக அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் ஓர் அழகான முகப்பு அமைக்கப்பட்டிருப்பதையும் காண ஆனந்தமாக இருக்கிறது.

சுவிஸ் விழாவும் மலரும் சிறக்க வாழ்த்தி மகிழும்.

**உடுவை எஸ்.தில்லை நடராசா**
**தலைவர்**
**உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி**
**பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை.**

# எழில் வானவில் வாழ்க!



விரிந்த உலகத்தின் வெவ்வேறு நாடுகளில்
பரந்து பட்டு வாழ்ந்தாலும் படித்த பள்ளிப் பாசத்தை
புரிந்துணர்து பேருதவி புரியும் தம்பி தங்கையரே;
கசிந்துருகும் உள்ளத்தால் காட்டும் அன்பை ஏற்றிடுவீர்!
அருங்கலையாய் ''வானவில்லை'' ஆண்டுதோறும் கைதூக்கி
விருந்தும் மருந்தும் என வேண்டுவன செய்கின்றீர்!
பெருந்தன்மை யோடிவற்றைப் போற்றி உமை வாழ்த்துகிறோம்!
பரந்த மனத் தொண்டுகளைப் பார்முழுதும் சொல்லிவைத்தோம்!

அன்பு கனிந்து மனஆர்வம் பெருகி எழ
இன்புடனே எமது கலைக்கோவில்களை எப்போதும்
பண்பிலுயர் நன்றியுடன் பார்முழுதும் போற்ற வைக்கும்
தன்மை நிறைந்தவரே! தகவில் உயர்ந்தவரே!
துன்பங்கள் எத்தனையோ தொடர்ந்து வந்த காலத்தும்
எங்கள் இரு கல்லூரி ஏற்றமுறச் செய்தீர்கள்
வன்பு செறிபோர் வெறியர் வைத்த பெருந்தீயினிலே
வெந்தழிந்த பள்ளிகளை விரைவாயத் துலங்க வைத்தீர்:

தொன்று தொட்டுச் சேர்த்து வைத்த தேடரிய நூல்களெல்லாம்
தீயில் எரித்து வெறும் துயர்ச்சாம்பல் ஆனதைநீர்
கண்டு உயிர் பதைத்துக் கண்ணீர்க் கடல் வீழ்ந்தும்
நின்று நிதானித்து நேர்ந்த குறை தீர்ப்பதற்குத்
தொண்டு பல தேர்ந்து செய்தீர் தெய்வம் எங்கள் கல்லூரி
இன்று புதுமலர் போல் எழில் பூண்டு நிற்கின்றாள்!
பண்டு இவள் பெற்ற புகழ் பன்மடங்கு ஆக இனி
என்றும் திகழ எண்ணும் எழில் ''வானவில்'' வாழ்க!

கே. தங்கவடிவேல்.



வானவில் 2008 நிகழ்வில் நடன விருந்தளித்தவர்களும் நடன ஆசிரியையும்.



வானவில் 2008 நிகழ்வில் நாடகமொன்றில் பங்கேற்றவர்கள் ஆசிரியையுடன் காணப்படுகின்றனர்.

# ஆக்கபூர்வமாகச் செயலாற்ற வாழ்த்துக்கள்!



கடந்த கால நிகழ்வுகளால் நாங்கள் புலம் பெயர்ந்தாலும் மனம் தளராமல் வாழ்வதற்கான அத்திவாரம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியாலும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியாலும் அமைக்கப்பட்டது. அதனால் ஆண்டுதோறும் கல்லூரிகளின் பெயரால் ஒன்றுகூடி எங்களின் வாரிசுகளுக்கு எங்கள் கல்லூரிகளை நினைவூட்டி, புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் ஒன்றான சுவிற்ஸலாந்தில் நமது பாரம்பரியக் கலைகளில் நமது குழந்தைகளை ஈடுபடுத்தும் அதேவேளை முடிந்தளவில் வளங்களைச் சேகரித்து, வாழ்வின் அத்திவாரம் அமைத்த கல்லூரிகளுக்கு வழங்க வேண்டுமென்பதே எமது பேரவா. அதற்காக ஒழுங்கு செய்யும் 'வானவில்' நிகழ்வுக்கு பங்களிப்பு வழங்கும் எங்கள் பணி தொடரும். தொடரும் பணியில் எல்லோரும் கரம் கோர்த்து ஆக்கபூர்வமாகச் செயலாற்ற வாழ்த்துகின்றேன்.

மஞ்சுளா லோகநாதன்
நிர்வாகக்குழு உறுப்பினர்
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
சுவிற்ஸலாந்து கிளை.

# சுவிஸ்

# வானவில் 2010

## நிகழ்ச்சி நிரல்

**காலம்**

19.06.2010 சனிக்கிழமை, பி.ப. 2.00 மணி

**இடம்**

**Ref. Kirchgemeindehaus,**
**Borrweg 71/ Schweighfstrasse 239,**
**8055 Zurich.**

ஆசிரியர் கு.சந்திரசேகரம் பிள்ளை அரங்கு & பண்டிதர் சி.வேலுப்பிள்ளை அரங்கு

மௌன வணக்கம்

மங்கல விளக்கேற்றல்

கல்லூரி கீதங்கள்

| | | |
|---|---|---|
| வரவேற்புரை | : | திரு.வே.ஞானேஸ்வரன் |
| தலைமையுரை | : | திருமதி நந்திமலர் தருமகுலசிங்கம் |

**உரைகள் :**

***பிரதம விருந்தினர்***

கலாநிதி திரு.த.வசந்தகுமார்
பழைய மாணவர் சங்க சர்வதேச ஒன்றிய இணைப்பாளர்

***விசேட விருந்தினர்***

திரு.தங்கவடிவேல் ஆசிரியர்
(இலண்டன்)

***கௌரவ விருந்தினர்***

திரு.வி.விஜயநாதன் (சுவிஸ்)


மேற்கத்தைய நடனம்

நகைச்சுவை நாடகம் : 'காதிலை பூ'

கவியரங்கு : தலைப்பு 'அழகு'

இசைவிருந்து : லௌசான் இசைக்குழு

நன்றியுரை : திரு.கு.ஜெயசீலன்



# தமிழ்ச்சமூகத்தின் பெருமைக்குரிய பேராசிரியர் அ.துரைராசா



தமிழ்ச்சமூகத்தில் பேராசிரியர்கள் பலர் தோன்றினாலும் - மிகமிக முக்கியமான கால கட்டத்தில் கல்வி அபிவிருத்திக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் பொதுவாக எல்லோரது நல்வாழ்வுக்கும் வழிகாட்டியாகத் திகழ்ந்து தன்னை அர்ப்பணித்து அமரராகியவர் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தராகப் பணியாற்றிய **பேராசிரியர் அழகையா துரைராசா.**

இலண்டன் கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்றாலும் ஆரம்பக்கல்வியை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் பெற்றதை பெருமையாகக் கூறும் பேராசிரியரை எமது கல்லூரியின் பழைய மாணவர் என்று கூறுவதில் நாங்கள் பெருமையும் மகிழ்வும் அடைகின்றோம்.

சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்து, கிராமக் கல்லூரியில் ஆரம்பக்கல்வியைப் பயின்று உலகப்புகழ் பெறுமளவுக்கு 'துரையின் கோட்பாடு' எழுதி சாதனை புரிந்தவர்.

அவரது அறிவு, ஆற்றல், ஆளுமை, அழகு எல்லாவற்றுக்கும் வெளிநாட்டுத்துணை தேடி சொகுசாக வாழ்ந்திருக்கலாம். ஆறாம் வகுப்புக்குச் சென்றவர் ஐந்தாம் வகுப்பைத் திரும்பிப் பார்க்க வெட்கப்படும் உலகத்தில் மண்ணையும் மக்களையும் நேசித்த மகான். 'மண்ணின் பௌதிக இயல்பு' (Soil Mechanics) பற்றி ஆராய்ச்சி செய்து அழியாப்புகழ் தேடியவர்.

இக்கட்டான காலகட்டத்தில் யாழ். பல்கலைக்கழக உபவேந்தராக அளப்பரிய சேவை செய்து நெடுந்தூரம் துவிச்சக்கர வண்டியிலேயே போக்குவரத்துச் செய்தவர். பொதுமக்களுடன் மக்களாக கிளாலிக் கடல் வழி கொழும்புக்குப் பயணம் செய்து கல்வியையும் கலைகளையும் வளர்த்தவர்.

கனடாவுக்குச் சென்றிருந்தபோது உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர்களையும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பழைய மாணவர்களையும் ஒன்றிணைய வைத்து 'வானவில்' நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து, பாரம்பரிய கலைகளை வளர்ப்பதோடு நிதி திரட்டி இரண்டு கல்லூரிகளுக்கும் வளம் சேர்த்து அவற்றைத் திறம்பட இயக்கியவர்.

கனடாவில் பழைய மாணவர்கள் ஒன்றாகிய முன்மாதிரியால் சுவிற்ஸலாந்து ஐக்கியராச்சியம் ஆகியவற்றிலும் 'வானவில்' தொடரக் காரணமானார். அவர் ஊன்றிய விதை உள்நாட்டிலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் கல்விப் பயிர் செழித்து வளரக் காரணமாக அமைந்தது. அதனால் அவரது பெயரால் திறமையான மாணவர்கள் 'புலமைப்பரிசில்' மூலம் படிப்பைத் தொடர்கின்றனர்.

அமரர் பேராசிரியர் அழகையா துரைராசாவின் திருநாமம் என்றென்றும் எம்மக்கள் மனதில் நிலைத்திருக்கும்.

- க.பாலசுப்பிரமணியம்



பழைய மாணவர் சங்க கனடா கிளைத் தலைவரும், சர்வதேச ஒன்றிய இணைப்பாளருமான கலாநிதி த.வசந்தகுமாருக்கு 'வானவில் வசந்தன்' பட்டம் வழங்கிக் கௌரவித்த போது அருகில் சுவிஸ் கிளைத் தலைவர் ப.செல்வஜோதியும், அருண் யோகேந்திராவும்.



இலங்கைப் பிரதிநிதி எஸ்.தில்லைநடராசாவுக்கு 'உடுவை வித்தகர்' என கௌரவப் பட்டம் வழங்கியபோது, அருகே வானவில் வசந்தன், சுவிஸ் கிளைத்தலைவர் செல்வஜோதி, அருண் யோகேந்திரா, விஜயநாதன் இரத்தினகுமார், இலண்டன் இ.இராமநாதன், கனடா பொ.கனகசபாபதி ஆகியோரும் காணப்படுகின்றனர்.

# ஆசிரியர் சந்திரசேகரம்பிள்ளை



சந்திரசேகரம்பிள்ளை வாத்தியார் என்றால் அவ் ஊரில் மட்டுமல்ல அயலூரிலும் அனைவரும் அறிந்த அன்பான மனிதர் என்றும் நினைவிலிருப்பார். தன் பிள்ளை போல் மாணவர்களை பொறுப்புடன் அவர்களின் ஆற்றலை வளர்க்க எடுத்து முயற்சிகள் அதற்காக மாணவர்களின் பெற்றோர்களை அணுகும் பண்பு அவரை மனிதருள் மாணிக்கமாய் திகழ வைத்தது. அவர் கொண்டிருந்த பற்றுதல் நிறைந்த தமிழறிவும் சமய ஈடுபாடும் சிறுபருவத்திலிருந்தே அவர் மீது மரியாதையையுண்டு பண்ணியிருந்தது.

1920 ம் ஆண்டு புரட்டாதித் திங்கள் 20 ம் நாள் இப் பூவுலகில் தந்தை குமாரசாமியும் தாய் செல்லாச்சியும் இவரை தம் அருமை மகனாகப் பெற்றெடுத்து தமிழறிஞரான இவர் தந்தையார் முறைப்படி கல்வி கற்க முன்னின்றார். சிறந்த விளையாட்டு வீரனாகவுமிருந்த இவர் தன் ஆரம்ப கால கடமையை திருகோணமலையில் கடற்படைத்தளத்தில் ஆரம்பிக்க அழைக்கப்பட்டார் என என் தந்தையார் பெருமையுடன் அவர் நட்பின் சிறப்பைக் கருதி கூறுவார். இரண்டாம் உலகப் போரின் மறைக்கப்படமுடியாத தடயங்களை திருகோணமலையில் இன்றும் காணமுடியும். அக்காலத்தில் பிரித்தானியாவின் தென்கிழக்காசியாவிற்கான பிரதான கடற்படைத்தளம் அங்குதான் அமைந்திருந்தது. துணிச்சல் மிக்க இளைஞரான சந்திரசேகரம்பிள்ளை வாத்தியார் அக்காலத்தில் அக் கடற்படைத்தளத்தில் பணியாற்றி தான் கற்ற உடுப்பிட்டி அ.மி. கல்லூரிக்கும் பெருமை சேர்த்தார். மக்களின் தேவையை தன் சேவையாக்க விளைந்த இவர் ஆசிரிய பயிற்சியை முடித்து உப்புவெளியில் தன் குறிக்கோளுடனான ஆசிரிய சேவையை ஆரம்பித்தார். அதன் பின்பு தான் கல்விகற்ற உடுப்பிட்டி அ.மி. கல்லூரியில் தன் சேவையைத் தொடர்ந்தார். அதன் பின் கெருடாவில் பாடசாலையிலும் அதன் பின் வல்வெட்டித்துறை பாடசாலையிலும் தன் பணியைத் தொடர்ந்து அவ் ஊர் மக்களின் நன்மதிப்பையும் பெற்றார். இவரின் சேவைக்காலத்தில் பயன் பெற்ற பலரும் இன்றும் அமரரான ஆசானின் பெருமையைக் கதைத்து நினைவுகூர்ந்து பெருமைகொள்வோம். சந்திரசேகரம்பிள்ளை வாத்தியார் என்றால் ஒருவித கலக்கமும் எமக்குண்டு. ஒழுக்கமும் கண்டிப்பும் இறுக்கமாகவே கொண்ட இவரின் தண்டிப்புக்கு அஞ்சாமலிருக்க முடியாது. ஆனால் அவரின் மகன் என் வகுப்பு மாணவனாக இருந்தமையால் அவரின் வீட்டிலும் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் கிடைத்தது. இவரின் அன்பு மனைவி சிவபாக்கியம் அம்மையார் ஆசிரியரின் மனதையுணர்ந்து ஒத்தாசைபுரியும் இல்லறத் துணைவியாக வாழ்ந்தமை அவரின் சேவைக்கு பேருதவி புரிந்தது. அவர் மாணவரிடத்தில் பாகுபாடின்றி அன்பும் பரிவும் கொண்டிருந்ததோடு ஒரு கட்டுக்கோப்பான கற்றுணர்ந்த சமுதாய உருவாக்கம் தான் ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து பாரதி கண்ட சமூகத்தை படைக்கமுடியும் என்ற கொள்கையுடன் செயற்பட்ட தீரர். இவர் என்பதை அனுபவத்தால் அறிந்து கொண்டேன்.. அரசியலிலும் தன் கொள்கைக்காக குரல் கொடுத்து இன உயர்விற்காக உறுதியுடன் செயற்பட்டார். 1974 ம் ஆண்டு சித்திரை மாதம் 27 ம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

வாழ்வாங்கு வாழ்வோர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர்.

**பழைய மாணவன்**
**பெரியதம்பி ஜெகநாதன்**
**மின்பொறியியலாளர்**
**சூரிச், சுவிற்சலாந்து.**



# பண்பும் அன்பும் மிக்க 'பண்டிதர்'



உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் மட்டுமல்லாமல் ஊரில் யாருக்கும் 'பண்டிதர்' என்ற சொல்லைக் கேட்டதும், இன்றும் நினைவுக்கு வருபவர் பன்னிரெண்டு வருடங்களுக்கு முன் அமரராகிவிட்ட எமது ஆசான் பண்டிதர் சி.வேலுப்பிள்ளை அவர்களே.

இதிகாசக் கதைகளிலும் இலக்கியப் புத்தகங்களிலும் வரும் 'ஆஜானுபாகு' வான கம்பீரத் தோற்றம். வெள்ளை வேட்டி, வெள்ளை நாஷனல், வெள்ளை உள்ளம் மட்டுமல்ல நல்ல தமிழும், மெல்லிய சிரிப்பும் சக ஆசிரியர்களையும் மாணவர்களையும் காந்தமெனக் கவர்ந்து விடும். தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர். கைப்பந்தாட்டம் உட்பட விளையாட்டுத் துறையிலும் வழிகாட்டியாகத் திகழ்ந்தார். குறிப்பாக பிழையற தமிழ்மொழியை எழுதவும், பேசவும், கையாளவும் காரணமாகத் திகழ்ந்த பண்டிதரின் பெருமுயற்சியால் பல மாணவர்கள், வடமராட்சி ஆசிரியர் சங்கம், வடமாகாண ஆசிரியர் சங்கம் மட்டுமன்றி தேசிய ரீதியில் நடைபெற்ற நாவன்மை, எழுத்தாக்க நாடகப் போட்டிகளிலும் பரிசில்களும், பாராட்டுக்களும் பெற்றனர்.

'ஆழிக்குமரன் ஆனந்தன்' எனப் பட்டம் பெற்ற கின்னஸ் சாதனையாளன் நீச்சல் வீரன் ஆனந்தனின் குருவாகவும் இருந்தவர் என ஆனந்தனின் தந்தையார் பாராட்டு விழாவொன்றில் சொல்லக் கேட்டிருக்கின்றேன்.

அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் முதன் முதலாக இந்து வாலிபர் சங்கம் அமைக்கப்பட்ட போது அதன் காப்பாளராகக் கடமையாற்றி நவராத்திரி பூஜை, சமயகுரவர் சந்தான குரவர் பூஜைகளை சிறப்பாகக் கொண்டாடவும் சமய தமிழ் அறிவு பெறவும் பக்கபலமாகத் திகழ்ந்தவர் 'பண்டிதர்'.

சரஸ்வதி தங்குமிடத்தில் இலட்சுமி தங்கமாட்டாள் என்ற கூற்றைப் பொய்யாக்கி, கல்வியோடு, செல்வம், வீரம் ஆகியனவும் நிரம்பப் பெற்று முன்னோடியாக வாழ்ந்து காட்டி பலருக்கு வாழ்வளித்த ஆசிரிய தெய்வம் பண்டிதர் சி.வேலுப்பிள்ளை.

**பழைய மாணவன்**
**தில்லை.**

# அமரர் க. முத்துவேல் ஆசிரியர்



"அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்பது போல் தனக்கென மட்டும் வாழாமல் பிறர்க்குரியனாய், வாழுதல் என இலட்சியம் கொண்ட மாந்தர்கள் உலகில் வாழ்ந்துள்ளார்கள். இதை நம் காலத்தில வாழ்ந்து காட்டியவர் எமது ஆசான் அமரர் திரு.க.முத்துவேல் ஆசிரியர் அவர்கள். உற்றார் உறவினர் என நோக்காது, அற்றார் அழிபசி நீக்கி, அவர்தம் அறிவுக்கண்களைத் திறக்கச் செய்த பண்புடையார். பலரை உருவாக்கி தன் நடத்தையால் மற்றவர்களைக் கவர்ந்து மனத்தால் எண்ணுவதெல்லாம் உயர்வாக்கி எண்ணித் துணிந்து வாழும் வாழ்க்கையை வாழ்ந்து காட்டிய பெருமைக்குரிய இவர் உடுப்பிட்டியின் பகுதியாகிய நவிண்டிலில் பிறந்தது அவ்வூர் மக்களுக்காக மட்டுமல்லாமல் சைவத் தமிழ் மக்களுக்காக வாழ்ந்த பெருமையும் அமரர் திரு க.முத்துவேல் ஆசிரியருக்கே உரியது. தனது ஆசிரியர்த் தொழிலை அவ்வூர் அப்பா பாடசாலையில் ஆரம்பித்து தனது நீண்டகால சேவையை உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரிக்கே அர்ப்பணித்து அறிவாற்றலுள்ள ஆசான்கள் பலரை உருவாக்கிய பெருமைக்குமுரியவர். தன் இளமைக் கல்வியை நிறைவு செய்த அவர், ஆசிரிய சிறப்புப் பயிற்சி பெற்று, சைவத்திற்கும் தமிழுக்கும் அளப்பரிய தொண்டாற்றியவர். பாடசாலை ஆசிரியர்த் தொழிலினின்றும் ஓய்வெடுத்தபின்பும் தன் கற்பிக்கும் சேவைக்கு அவர் ஓய்வு வழங்கவில்லை. தன் ஓய்வு நேரங்களிலெல்லாம் மாணவ மாணவியர்க்கு மட்டுமல்ல வயதானவர்கள்கூட தமது தமிழ் சமய தாகத்தைத் தீர்க்கும் தடாகமாகத் திகழ்ந்தார். தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய அறங்காவற் குழுவில் அங்கத்தவரான அவர், ஆலயத்தின் மாதாந்த ஆன்மீக அறிவுமலருக்கு பிரதம ஆசிரியராக தன் இறுதி மூச்சுள்ளவரை விளங்கியவர். இவ்வித செயற்பாடுகள் அவரின் சமய தமிழ்பற்றுதலை பறைசாற்றி நிற்கின்றன. ஆசிரியர் பாலபண்டிதர் என இவ்விதம் பல தகமைப் பட்டங்களைத் தனக்கே உரித்தாக்கிக் கொண்ட எமது ஆசான் தன் முதுமையான காலத்திலும் சுவிற்ஸலாந்தின் சூரிச் சிவசுப்பிரமணியர் தேவஸ்தானத்தின் அழைப்பை ஏற்று 2003 ம் ஆண்டு சுவிற்ஸலாந்திற்கு வருகைதந்து திருவிழாக் காலத்தில் தினமும் பகலும் இரவும் சமய சொற்பொழிவாற்றி இளையோர் முதல் பெரியோர் வரை அன்பான பாராட்டுதலுக்குரியவரானார். சுவிற்ஸலாந்திற்கு ஆசிரியர் வந்திருந்த போது உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கம் சுவிஸ் கிளை எமது பாடசாலைக்கு ஆற்ற வேண்டிய பல பணிகள் பற்றி தனக்கே உரிய கண்டிப்பான, ஆனால அன்பான கட்டளையைப் பிறப்பித்துச் சென்றார். ஊருக்கு மட்டுமல்ல நாட்டிற்கே பெருமை சேர்க்கும் பாடசாலைகள் தரமானவை ஆக்கப்பட வேண்டும் என்ற கருத்தை உரிமையுடன் விதைத்துச் சென்றவர்.

இக்காலத்தில் இவரிடம் கல்வி கற்றவர்கள் பண்பாளர்களாக, விரிவுரையாளர்களாக, வைத்தியர்களாக, கலைஞர்களாக, பொறியியலாளர்களாக, பணிப்பாளர்களாக, அதிபர்களாக, ஆசிரியர்களாக இன்று இலங்கையில் மட்டுமல்ல உலகமெல்லாம் பரந்து காணப்படுகின்றார்கள். அவரின் கனிவான பேச்சும், அன்பான உபசரிப்பும், எல்லோரையும் கவரும் நயம்பட உரைக்கும் மொழி நடை என்பவற்றால் மனிதநேயத்தைத் தன்பால் ஈர்த்துக் கொண்டவர். பாலபண்டிதர் அமரர் க. முத்துவேல் ஆசிரியரின் மாணவனாக நானும் இருந்தேன், அவரிடம் தமிழ் சமய அறிவைப் பெற்றேன் என்பதே என் வாழ்வின் பயனாக கருதக் கூடிய அளவிற்கு சமூகப்பணி தமிழ்ப்பணி சமயப்பணி என வாழ்ந்து காட்டிய மாமனிதராக அனைவருள்ளங்களிலும் வாழும் உத்தமர் இவர்.



க. முத்துவேல் ஆசிரியரின் மாணவன்
விஜயநாதன் இரத்தினகுமார்
இரசாயனவியலாளர்
சுவிற்ஸலாந்து

# ஆசிரியர் சோமசுந்தரம்




பாடசாலைக் காலங்களில் நாம் பழகிய ஆசிரியர்கள் பலர். எமது ஆற்றலுக்கு அடிக்கோடு தந்த பெரிய மனிதர்கள் அவர்கள். நாட்டின் எதிர்கால சந்ததியை உருவாக்கும் உன்னத பொறுப்பு மிக்கவர்கள். ஆசான் வழியே தான் மாணவர்களும் என்பதற்கு அமைய பொறுப்புணர்வுடனும் இன்முகத்துடனும் மாணவர்களை அணுகிய என் ஆசான் சோமசுந்தரம் ஆசிரியர் மாணவர்களிடையே தோன்றும் சச்சரவுகளை மனம் நோகாவண்ணம் அவர்களின் பிரச்சினைகளை ஆர்வத்துடன் அணுகி நட்புறவைப் பேணவைக்கும் அவரின் முயற்சிகள் என் எண்ணத்தில் இன்றும் தென்படும் காட்சிகள். அவரின் நாமத்திற்கேற்ப சுந்தரமான ஆனந்தம் எங்களுக்கு அவரை அச்சமின்றி அணுகத்தோன்றும்.

பாடசாலையில் மட்டுமல்ல பாடசாலைக்கு வெளியேயும் தன் மாணவர்களுடன் பழகும் அவரின் பண்பும் கனிவும் பசுமரத்தாணிபோல பதிந்து நிற்கும் காட்சிகளாக இன்றும் காண்கிறேன். பாடசாலை அண்மை ஊரில் வாழ்ந்த இவர் தன் மாணவர்களை மட்டுமல்லாமல் பெற்றோர்களையும் அறிந்திருந்தார். அவர் பாடசாலைக்கு அயல் மாணவ மாணவிகள்மேல் கொண்டிருந்த அக்கறை அவரை அனைவரும் குடும்ப அங்கத்தவராக பழகும் அன்பைப் பெற்றிருந்தவர். நாட்டின் நிலவிய துன்பகர காலங்களிலும் கல்வியைக் கண்ணாகக் கொண்டிருந்த எம்மூர் மக்களுக்கு அவர்களின் எண்ணங்கள் ஈடேற உறுதுணையாயிருந்த மகத்தான மனிதர் அன்புக்குப் பாத்திரமான ஆசிரியர் அமரர் திரு. சோமசுந்தரம் அவர்கள். இவர் போன்ற நல்லாசான்களைக் கொண்டபெருமையை எமது கல்லூரி பெற்றுள்ளமை மகிழ்ச்சியைத்தருகிறது.

இனபேதம், பிரதேச வேற்றுமை என்பவற்கு அப்பால் தனது சேவையை செயலாக்கிய கருமவீரர். 29.10.60 தனது ஆசிரியப் பதவியை வவுனியா சின்னத்தம்பனை அ.த.க பாடசாலையில் ஆரம்பித்த இவர் 31.12.66 வரை அம்மக்களுக்காக வாழ்ந்தவர். அதன் பின்னர் ஆசிரியப்பணியை மேம்படுத்த நல்லூரிலுள்ள ஆசிரியர் கலாசாலையில் 1.1.66 முதல் 31.12.67 வரை பயின்று 1.1.68 மலையக மக்களின் நலன் கருதி நுவரெலியா சென்று கணபதி மகாவித்தியாலயத்தில் தன் சேவையை விஸ்தரித்த இவர் பங்குனி 71ம் ஆண்டு வரை கடமை புரிந்தார். அதன் பின்னர் மார்கழி 1972 வரை நுவரெலியா கினிகத்தென்னை சிங்கள ஆரம்ப பாடசாலையில் தமிழறிவையையும் 1973ம் ஆண்டு முதல் மார்கழி 1990ம் ஆண்டு வரை எமது அ.மி.கல்லூரியில் சேவை புரிந்து எம் இதயங்களில் இன்றும் வாழும் உத்தமனாக விளங்குகின்றார்.



பழைய மாணவன்
த.சிவம்,
சுவிற்ஸலாந்து



பழைய மாணவர் சங்க-ஜேர்மனி பிரதிநிதி பொறியியலாளர் ப.அழகலிங்கத்தைக் கௌரவித்தபோது அருகில் சுவிஸ் கிளைத் தலைவர் ப.செல்வஜோதியும் ஒருங்கிணைப்பாளர் கணா.கணபதிப்பிள்ளையும் காணப்படுகின்றனர்.



சுவிஸ் கிளையைச் சேர்ந்த திரு.விஜயநாதன் நீண்ட காலச் சேவைக்காக கௌரவிக்கப்பட்டார்.

# விகடக் கதைகளுடன் படிப்பித்த ஆசிரியர் வி.தம்பிராசா



சக ஆசிரியர்கள் மத்தியிலும் மாணவர்கள் மத்தியிலும் சாதாரண ஆசிரியர்கள் கூட கற்பிக்கும் ஆற்றலாலும் வழங்கும் பங்களிப்பாலும் செல்வாக்குள்ள பிரபல ஆசிரியர்களாகத் திகழ்வார்கள் என்பதற்கு ஆசிரியர் V.தம்பிராசா ஓர் உதாரணம். குடியியல் ஆங்கிலம் ஆகிய பாடங்களை சிறப்பாகப் போதிக்கும் ஆற்றல் பெற்ற ஆசிரியர் தம்பிராசா Bicknell House என அழைக்கப்பட்ட மஞ்சள் இல்லத்துக்கு பொறுப்பாசிரியராக இருந்தார். நாடகத் துறை வளர்ச்சிக்காக ஆசிரியர் எம்பெருமானுடன் இணைந்து மாணவர்களை ஊக்குவிப்பதிலும் நடன வளர்ச்சிக்காக ஆசிரியர் ஆனந்தராஜாவுடனும் சாரணிய இயக்க முன்னேற்றத்துக்காக ஆசிரியர் நீலகண்டன், ஆசிரியர் செல்வவிநாயகம் ஆகியோருடனும் இணைந்து செயற்பட்டவர்.

ஆசிரியர்களுக்கோ அல்லது மாணவர்களுக்கோ சோர்வு ஏற்படும்போது உற்சாகமாகக் கதைகள் சொல்லி, தானும் ஈடுபட்டதாக நம்ப வைத்து சிரிக்க வைத்து மெல்லத்தட்டிக் கொடுத்து சோம்பலைப் போக்குவதில் வல்லவர் தம்பிராசா. எப்போதாவது இருந்திருந்து ஆசிரியர் சொல்லும் கதைகளுக்காக அவரது வகுப்புக்கு மட்டம் போடாமல் சென்ற மாணவர்களும் இருந்தனர். உதாரணத்துக்கு ஒன்று:-

''காட்டுப்பகுதியிலுள்ள பள்ளிக் கூடத்தில் படிப்பிக்கிறபோது துவக்கில் தோட்டாவை நிரப்பிக் கொண்டு, வேட்டையாடுற மிருகங்களை வெட்டுறதுக்கு ஒரு கத்தியும் கொண்டு போனால், இரண்டு மூன்று மான் மரையோடுதான் திரும்பி வாறனான்.

''ஒரு நாள் கனதூரம் போயிட்டன். எல்லாம் குறிதப்பியிடுத்து. ஒண்டும் அகப்படயில்லை. சரி திரும்புவம் எண்டு திரும்பி வந்தால் திடீரெண்டு வலது பக்கத்திலையிலிருந்து ஒரு புலி பாய்ந்து பாய்ந்து வந்து கொண்டிருக்கு. இடது பக்கம் ஒரு சிங்கம் உறுமிக்கொண்டிருக்கு.

''துவக்கிலை ஒரு தோட்டா தான் மிச்சமாகக் கிடக்கு. புலியைச் சுட்டால் சிங்கத்திட்டையிருந்து தப்ப முடியாது. சிங்கத்தைச் சுட்டால் புலியிட்டைத் தப்ப முடியாது. 'டக்' எண்டு ஒரு ஐடியா.

''இடுப்பிலை சொருகி இருந்த கத்தியை எடுத்து மேலை எறிஞ்சன். எறிஞ்ச கத்தி கீழை விழுறத்துக்குள்ளை இருந்த ஒரு தோட்டாவைப் பாவிச்சு கத்திக்கு குறி வைச்சுச் சுட்டன். உடனே கத்தி இரண்டாகப் பிளந்து ஒரு பகுதி புலியின்ரை குடலை கீற அது சரி. கத்தியின்ர மற்றப்பாதி சிங்கத்தின்ர வாயிக்குள்ளாலை அதுகின்ர வயித்துக்குள்ளை போயிடுத்து.

''சிங்கத்தின்ரை இறைச்சி, புலியின்ர இறைச்சி சாப்பிடுவதில்லையெண்டபடியால் வெறும் கைபோடை தான் வீட்டை வந்தனான்.''

- எஸ்.டி.ராஜன்

# ஆசிரியர் 'அருள் எம்பெருமான்'

ஆரம்ப காலத்தில் சித்திர ஆசிரியராகவும், ஆசிரிய கலாசாலைப் பயிற்சியின் பின் ஆங்கில ஆசிரியராகவும் கடமையாற்றிய 'அருள் எம்பெருமான்' நாடக ஆற்றலால் கல்லூரியில் மாத்திரமன்றி அயல் ஊர்களிலும் அறிமுகமாகியிருந்தார்.

ஒவ்வொரு வருடமும் முதலாந் தவணையில் இடம்பெறும் பெற்றோர் தினக் கொண்டாட்டத்தில் எம்பெருமானின் நாடகம் பார்த்து ரசிக்க தூர இடங்களிலிருந்தும் பலர் வருவர். சிறுவயதிலிருந்தே அவரது நாடகங்களில் நடித்த மாணவர்கள் 'வானம்பாடி' யோகராசா, பரமசாமி, ஞானதாசன் உட்பட பல மாணவர்களை இன்னும் நினைத்துப் பார்க்கும் ரசிகர்களைச் சந்தித்துள்ளேன். நாடக பாத்திரங்களின் பெயரால் 'Shoot சோதி', 'முல்லை சிவராசசிங்கம்', 'காய்க்காங்கோ முருகையா' என அழைக்கப்படுவதும் சகலரும் அறிந்த சங்கதி.

கல்லூரிக்கு வெளியிலும் 'சோலைமலை இளவரசி', 'மருதநாட்டு வீரன்', 'சங்கிலியன்', 'பலிபீடம்' ஆகிய நாடகங்ளைத் தயாரித்தளித்து கல்லூரிக்குப் புகழ் தேடித் தந்த அருள் எம்பெருமான் பன்முக ஆளுமை மிக்கவர். பிரதியாக்கம், நெறியாள்கை, தயாரிப்பு, பாடல் எழுதல், இசையமைத்தல், விளையாட்டுத்துறை, சாரணியம் என பலதுறைகளில் முத்திரை பதித்தவர்.

- பழைய மாணவன்
த.சிவநாதன்
முன்னாள் மாவட்ட முகாமையாளர்
தேசிய வீடமைப்பு அதிகாரசபை

# ஆசிரியர் ஆனந்தராஜா

'கைப்பணி' ஆசிரியராகக் கடமையாற்றிய ஆனந்தராஜா அவர்கள் நடன ஆற்றலால் கல்லூரியிலும் சுற்றுவட்டாரங்களிலும் நன்கு அறியப்பட்டவராக இருந்தார்.

களிமண்ணிலிருந்தும் காகிதத்திலிருந்தும் பொம்மைகள் உட்பட விதம் விதமான பொருட்களைச் செய்வதற்கு மாணவர்களைப் பயிற்றுவித்தாலும், பெற்றோர் தினக் கொண்டாட்டத்திற்கென உயர்வகுப்பு மாணவிகளுக்கு சாஸ்திரிய நடனத்தையும் சிறுவர்களுக்கு கிராமிய நடனத்தையும் பயிற்றுவிப்பார்.

அகில இலங்கை ரீதியில் அநுராதபுரத்தில் இடம்பெற்ற நடனப்போட்டியில் ஆனந்தராஜா பழக்கிய 'வானம் மழை பொழிய வேணும்' என்ற கிராமிய நடனம் 1963ம் ஆண்டு முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்டது.

சுமார் 50 வருடங்களுக்கு முன் உயர்வகுப்பு மாணவிகள் கலந்து கொண்ட 'டடடாட டடடாட டாட இளமை ஒருமுறை தான் வரும். கதை பல கூறும்' பாடலையும் ஆடலையும் இன்றும் எண்ணிக் களிக்கும் பலரை நன்கு அறிவேன்.

ஆண் சிறுவர்களை சிறுமிகளாக வேடமிட வைத்து, அவர்களின் நகை ஆசையை

*'அம்மா ரொம்ப ரொம்ப நகைகள்*
*நான் கேட்கவில்லை - அப்பா மனசில*
*வருத்தம் வைக்கவில்லை*
*காதுக்கு கம்மல் இரண்டு*
*கழுத்துக்கு சங்கிலி ஒன்று*
*கைகளுக்கு வளையல் நான்கு*
*இடுப்புக்கு ஒட்டியாணம் ஒன்று'*

என்று பாடி ஆட வைத்து சபையை மகிழ்வித்தவர் ஆனந்தராஜா.

- சிவம்
**இமையாணன்.**

# என் கல்வியில் ஒளி விளக்காய் திகழும் என் அதிபர்



எனது கல்லூரி முன்னாள் அதிபர் கிருஷ்ணபிள்ளை நடராசா அவர்கள் 1945ம் ஆண்டு மார்கழி மாதம் 20ம் திகதி வடமராட்சியில் கம்பர்மலை கிருஷ்ணபிள்ளை - சரஸ்வதி தம்பதிகளின் புதல்வராகப் பிறந்தார். ஆரம்பக்கல்வியை வல்வெட்டி இந்து கலவன் பாடசாலையிலும், உயர்கல்வியை சிதம்பராக்கல்லூரியிலும் தொடர்ந்த இவர் கொழும்பு பல்கலைக்கழகத்திலும் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் கல்வி பயின்று பட்டதாரியானார். பட்டப்பின் படிப்பான கல்வி டிப்ளோமாவையும், முதுகலை மானிப்பட்டத்தையும் யாழ் பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டார்.

ஆசிரியராக தொழிலை ஆரம்பித்த இவர், பகுதித்லைவர், பிரதி அதிபர் என உயர்வு பெற்று 09.06.1997 முதல் கல்லூரி அதிபராக பதவி உயர்வு பெற்றார். 1997 முதல் 2002 வரை யாழ். பல்கலைக்கழக இடைவரவு விரிவுரையாளராவும் கடமையாற்றினார்.

கல்லூரிக் காலத்தில் விளையாட்டுத்துறையில் குறிப்பாக உதைப்பந்தாட்டத்திலும், விவாத அரங்கு, நாவன்மை போட்டிகளிலும் தன்திறமையை சிறப்பாக வெளிப்படுத்தினார். பல்கலைக்கழக நாடகங்களிலும் பங்கேற்ற இவர், கம்பர்மலை பாரதி சனசமூக நிலையம், அல்வாய் பாரதிதாசன் சனசமூக நிலையம் ஆகியவற்றின் தலைவராகவும் வதிரி பரமானந்த ஆச்சிரம நிர்வாகக் குழு உறுப்பினராகவும் சமூகப்பணியாற்றினார்.

உயர் அதிகாரிகள், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளுடன் நல்லுறவைப் பேணி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்கு பௌதீக வளங்கள் பலவற்றைப் பெருக்கியபெருமை அதிபர் கி.நடராசாவுக்குரியது. குறிப்பாக சில கட்டடங்கள், செயற்பாட்டறை, பாடசாலைக்கான நூலக வசதிகள், நூல்கள், தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையம், பல்லூடாக அரங்கு, விஞ்ஞான ஆய்வுகூடம், மலசல கூட வசதிகள் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக அதிபர் நடராசா எடுத்த பெருமுயற்சிகளும் கிடைத்த பெறுபேறுகளும் எல்லோராலும் சிலாகித்துப் பேசப்படுகின்றது. மேலும் கல்வித் தெய்வமான சரஸ்வதிக்கு சிலை அமைத்தது, அலுவலகத்தை நவீனமயப்படுத்தியது, மின்சாரவசதி தொலைபேசி பெற்றுக் கொண்டது ஆகியனவும் இவரது காலத்தில் இடம்பெற்றது. எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தது போல பழைய மாணவர் சங்க கொழும்புக்கிளையின் ஒத்துழைப்பைப் பெற்று 150ஆவது ஆண்டு விழாவையொட்டி பெறுமதியான மலர் வெளியிட்டதும், முதல் நாள் முத்திரை வெளியிட்டதும் சாதனைகளே!

அதிபர் கடமையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் பாடசாலை அபிவிருத்தியிலும், மாணவர் வளர்ச்சியிலும் அக்கறையான பங்களிப்பு நல்கிவரும் முன்னாள் அதிபர் கி.நடராசா என் மனதில் மட்டுமன்றி அனைத்து மாணவர் மனங்களிலும் ஒளிவிளக்காகத் திகழ்வார்!

ந.துவாரகன்
கலைப்பிரிவு (2011)
யா/ உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.






வானவில் 2008 நிகழ்வுக்கென கணா.கணபதிப்பிள்ளை
தயாரித்த திடீர் நாடகத்தில் இரண்டு காட்சிகள்.

# ஆசிரியர். தி.யோகசாமி



உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்கு சிறப்புகள் பெற்றுக் கொடுத்த பழைய மாணவர்களுள் தி.யோகசாமியும் முக்கிய இடம்பெறுகின்றார். ஆரம்பகல்வியை கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் பெற்ற இவர் உயர்கல்வியை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் தொடரும்போது அதிபர் K.T.ஜோன், ஆசிரியர் றொபேட் நவரத்தினம் ஆகியோரின் பாரட்டுக்குரியவராகவும், கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், குறுந்தூர ஓட்டம் முதலியவற்றில் சாதனை நிலைநாட்டியதோடு, நடித்தல், பாடுதல் ஆகிய கலைகளிலும் திறமையை வெளிக் காட்டினார்.

1957ல் கம்பர்மலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரியப் பணியை ஆரம்பித்து ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சியைப் பூர்த்தி செய்து பதுளை, வவுனியா, பளை ஆகிய இடங்களில் கடமையாற்றினார். பின்தங்கிய வவுனியா பாவற்குளம் கணேஸ்வரா வித்தியாலயத்தில் க.பொ.த உயர்தர வகுப்புகளை ஆரம்பித்ததோடு, அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்ற 'ஏகலைவன்', 'ஒருசதம்' ஆகிய நாடகங்களையும் தயாரித்தார்.

1985ல் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி ஆரம்ப பிரிவுக்கு பொறுப்பாக இருந்து அதிபர்களின் பாராட்டையும் ஆசிரியர்கள் மாணவர்களின் நன்மதிப்பையும் பெற்றார். கரப்பந்தாட்டம், கால்பந்தாட்டம், கிரிக்கெட் பயிற்றுவிப்பாளராகவும் கடமையாற்றியதோடு ஓய்வு பெற்ற பின்னர் பழைய மாணவர் சங்கத்தில் பல பதவிகளையும் வகிப்பதோடு செயலாளராகப் பதவி வகித்த போது சுவிற்ஸலாந்தில் இடம்பெற்ற முதலாவது 'வானவில்' நிகழ்வில் கலந்து கருத்துரையாற்றிச் சிறப்பித்தமையும் குறிப்பிடத்தக்கது.

- தகவல் -
செல்வன். ந.திருமாறன்
செல்வன் இ.வாகிதரன்
செல்வன்.அ.உஷாநந

# கலாநிதி இரா.மகாலிங்கசிவம்



உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்கு பெருமையும் பெருமதிப்பும் தேடித்தந்த பழைய மாணவர்களுள் கலாநிதி இரா.மகாலிங்கசிவமும் குறிப்பிடத்தக்கவர்.


எப்போதும் சிரித்த முகத்துடன் சிநேக மனப்பான்மையுடன் பழகும் இவர் மிகவும் எளிமையாக வாழ்ந்து காட்டிய அறிஞர் பெருமகன். கல்வியைப் பூர்த்தி செய்து அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் தொண்டராசிரியராக தொழிலை ஆரம்பித்து படிப்படியாக உயர்ந்து, அரசின் உயர் பதவியான நிர்வாக சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டு, கணிதத்தில் புலமை மிக்கவராகி 'கலாநிதி' கௌரவப் பட்டம்பெற்று பல அமைச்சுகளில் பொறுப்பான பதவி வகித்து நிதி ஆணைக்குழுவிலும் கடமையாற்றிய திறமைசாலி. கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் உயர்கல்வி நிறுவனங்களிலும் விரிவுரையாளராகவும் பணியாற்றியவர்.

கிராமத்துக் கல்லூரி நினைவுகளை நெஞ்சில் சுமந்த வண்ணம் வாழ்ந்த இவர் 1993இல் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளைத் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். இவரது தலைமையின் கீழ் வானொலி, தொலைக்காட்சி நடிகர்கள் மூலம் நிதி சேகரிக்கப்பட்டு கல்வி அபிவிருத்திக்கு பயன்படுத்தியமையும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவு விழா சிறப்பு மலர் வெளியிட்டமையும் அரச தபால் திணைக்களத்தால் கல்லூரி அரங்கில் விசேட முத்திரையுடன் முதல் நாள் உறை வெளியிடப்பட்டமையும் குறிப்பிடக் கூடிய சாதனைகள்.

உடுப்பிட்டியில் பல பெற்றோர்கள், 'மகாலிங்கசிவம் மாதிரிப்படிக்க வேண்டும், அவரைப்போல பண்புள்ளவராக நல்ல குணமுள்ளவராக, அடக்கமுள்ளவராக வரவேண்டும்' என்று தங்கள் பிள்ளைகளுக்கு முன்னுதாரணம் காட்டுமளவுக்கு சிறப்பாக வாழ்ந்தவர் அமரர் கலாநிதி இரா.மகாலிங்கசிவம்.

**அ.தளையசிங்கம்**
**கொழும்புக் கிளை.**

# பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையை செயற்பட வைத்தவர்



சிவந்த நிறம் - சிரித்த முகம் - உருளும் விழிகள் - குழந்தைக்குரல் - இடையிடையே சிரிப்பூட்டும் கதைகள் - பயனுள்ள பல தகவல்களை பகிர்ந்து கொள்ளும் ஆற்றல் - இத்தனையும் சேர்ந்த **அமரர் கணபதிப்பிள்ளை மகாதேவா** உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பழைய மாணவர் சங்க கொழும்பக் கிளையைச் செயற்பட வைத்தவர்.

ஆம்! கொழும்புக் கிளை ஆரம்பிக்கப்பட்டது முதல் இறுதி மூச்சு வரை அதன் செயலாளர் பொறுப்பை ஏற்று நடத்தியது மட்டுமல்லாமல் செயற்குழுக் கூட்டங்களை தனது இல்லத்தில் நடாத்தி அவரது குடும்பத்தினரையும் குதூகலத்துடன் ஈடுபட வைத்து நல்ல முறையில் விருந்தோம்பும் பண்பையும் தொடர்ந்து கடைப்பிடித்தவர்.

மிகமிகக் குறைந்த மனித வளம் பௌதிக வளங்களுடன் இயங்கிய பழைய கல்லூரியாகிய உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பல்வேறு தேவைகளை இனம் காண்பதிலும், அவற்றை அடையத்தக்க வழிகளை காண்பதிலும் மகாதேவாவின் பங்களிப்பு அதிகம்.

எங்கள் கல்லூரி 150 ஆம் ஆண்டு பூர்த்தி செய்த போது 150ம் ஆண்டு நினைவு மலரைக் கொழும்புக் கிளை பொறுப்பேற்றபோது, அதனைச் சிறப்பாக வெளியிடுவதற்கும் முதல் நாள் முத்திரை வெளியிடுவதற்கும் ஆர்வத்துடன் ஒத்துழைத்து கல்லூரியைப் பற்றிய பெருமைகளையும் சிறப்புக்களையும் வெளிக்கொண்டு வருவதில் அரும்பாடுபட்டவர் அமரர் மகாதேவா. தனது பணிகளால் எமது கிளையின் வரலாற்றில் ஒரு தனியிடத்தைத் தனக்கென ஏற்படுத்தியவர் மகாதேவா.

சட்டத்தரணி கந்தையா நீலகண்டன்
வடகீழ் மாகாண பழைய மாணவர் சங்கச் சம்மேளனத் தலைவர்
உடுப்பிட்டி அ.மி.கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக்கிளை முன்னாள் தலைவர்.



# துடிப்பான எண்ணங்கள் அந்நிய வாழ்வில் அடிமையாகிப்போகுமா?



புலம்பெயர் நாடுகளில் வாழும் மக்கள் பலரும் ஏதோ ஒரு வித ஏக்கத்துடன் இருப்பதை எம்மால் அனுபவித்தும் அனுசரித்தும் உணர முடிகிறது. தமிழர்களாகிய எம்மில் பலர் தமது வாழ்வைத் தொலைத்து பிள்ளைகள் என்ற முதலீட்டை உருவாக்கியவர்களாகவே உணர முடிகிறது. தமது வாழ்வின் அர்த்தம் பிள்ளைகளின் வாழ்வு மட்டும் என்பதே வெளிப்படையாக உள்ளது. இது புலம்பெயர் மக்களுக்கு மட்டுமல்ல அனைத்து பெற்றோர்களிலும் இயல்பாக உள்ள உணர்வு. ஆனால் புலம்பெயர் மக்களில் சொந்த நாட்டைப் பிரிந்த உணர்வு பெரும் இழப்பாகத் தென்படுவதைக் காணலாம். உற்றார், உறவினரைப் பிரிந்த வாழ்வு இளம் பெற்றோரே பிள்ளைகளை முழுமையாகப் பராமரிக்கும் பொறுப்பு, பண வருவாயே புகலிட வாழ்வின் இருப்பைத் தீர்மானிக்கும் தன்மை, வாழ்விட நாடுகளின் கலாசாரத்திற்கேற்ற சட்டங்களின் அழுத்தம் இவை ஏக்கங்களின் ஊற்றாக அமைந்து விடுகிறது.

பிள்ளைகளின் எதிர்கால வாழ்வு தரமாக அமைக்கப்பட வேண்டுமானால் அவர்கள் வாழும் சூழல் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். இதைத் தீர்மானிப்பது பெற்றோரின் வருமானம் வதிவிட நாட்டின் சட்டதிட்டங்கள் தீர்மானிக்கும் வதிவிட உரிமைப் பத்திரத்தின் தன்மை. இப்புறச் சூழ்நிலைகளின் நெருக்குவாரங்களின் மத்தியிலேதான் சுவிற்ஸலாந்தில் வாழ்க்கை நிலமை. இந்நாட்டின் தரமான வாழ்வாதாரத்தை எட்டி பிள்ளைகளின் படிப்பையும் கவனிக்கும் பாரிய பொறுப்பு பெற்றோரைச் சார்ந்து நிற்கிறது. இப்பாரிய சுமை உருவாக்கும் மன அழுத்தங்களின் வெளிப்பாடு இந்நாட்டில் இள வயதிலேயே தோன்றும் இனம் புரியாத நோய்களாக இனங்காணப்படுகிறது. இரத்த அழுத்தம், சலரோகம் பல வித இருதய வருத்தங்கள் போன்ற நோய்களினாலும் சுகாதாரமற்ற வேலை இடங்கள் உருவாக்கும் சரும நோய்கட்கும், சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்கட்கும் குளிரால் ஏற்படும் உடல் நோ சம்பந்தமான நோய்கட்கும் தீர்க்க முடியாத அல்லது வெளிக் கொண்டுவர முடியாத நோய்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் ஏற்படுத்திய மன நோயாளிகளாகவும் வாழவேண்டிய துர்ப்பாக்கிய சூழ்நிலை சொர்க்க பூமி சுவிற்ஸலாந்தில்.!

இவை அனைத்தையும் சமாளித்து வாழப் பழகிக் கொண்டால்தான் ஓரளவு நிம்மதியான வாழ்வை அமைக்க முடியும். தமிழர்கள் சுவிற்ஸலாந்தில் கடும் உழைப்பாளிகளாகவும் முன்னேற்றமான சமுதாயமாகவும் கணிக்கப்பட்ட ஒரு இனமாக உள்ளது. மூன்றாம் சந்ததியினரின் கல்வித் தகைமைகள் அவர்களை மதி நுட்பம் உள்ள மனிதர்களாகக் காட்டி நிற்கின்றது. இப்பெறுபேறுகள் மனதிற்கு ஆறுதல் அளித்தாலும் இங்கு குடியேறி, சொந்த கலாசாரத்தில் பற்றுக் கொண்ட பெற்றோர்கள்,



வானவில் 2008 நிகழ்வை வெற்றிச் சாதனையாக்கிய உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்க சுவிஸ் கிளைச் செயற்குழுவினர்.



வானவில் 2008 பார்வையாளரில் ஒருபகுதியினர்.

பிள்ளைகளில் தொற்றியிருக்கும் வதிவிட நாட்டின் கலாசாரத்தின் ஈடுபாடுகொண்ட பற்றுதல்கள், நடை உடை பாவனைகள் தோற்றுவித்துள்ள மாறுதல்களால் அமைதியிழந்து அவதிப்பட்டுக் சஞ்சலமுற்றுள்ளார்கள். பெற்றோர்கள் பிள்ளைகளின் வாழ்வில் இணக்க மனப்பான்மைக்கு உட்படவேண்டுமென்ற மனோநிலை உருவாக்கப்பட வேண்டும். எம்மிடையே உள்ள குரோதம் மிகுந்த போட்டி மனப்பான்மை வரட்டுக் கௌரவம் என்பன இன்னல்களை இன்னும் அதிகரிக்கச் செய்கிறது. இதன் வெளிப்பாடாக ஒருவருக்கொருவர் நம்பிக்கையற்ற தன்மை மாற்றார் அவலத்தைப் பரிகசிக்கும் ஆர்வம் புலம் பெயர் நாடுகளில் அதிகரித்துள்ளமை காணக்கூடியதாக உள்ளது. அதை விடுத்து தவிர்க்க முடியாத இச்சூழ்நிலைகளினால் தடுமாறிப்போன பிள்ளைகளின் பெற்றோர் இப் பாதிப்பு தமது கௌரவத்திற்கேற்பட்ட இழுக்காக எண்ணி பிள்ளைகள் மேல் ஆத்திரம் கொள்ளல், உணர்ச்சிவசப்பட்ட நடவடிக்கைகள் இந்நாட்டின் சட்டவரைமுறைகளுக்கு ஒவ்வாததால் பிள்ளைகளை பெற்றோரிலிருந்து நிரந்தரமாகப் பிரித்து பிள்ளைகள் பராமரிப்பு, பாதுகாப்பு என்ற நடைமுறை கைக்கொள்ளப்படுவதால் இதை அடியோடு எதிர்பாராத அல்லது வெறுக்கும் பெற்றோர்களின் அதிர்ச்சியோடான இயலாமையின் வெளிப்பாடும் மூலதனமே முடங்கிப் போய் ஏமாற்றமடைந்தவர்களாக வாழும் துர்ப்பாக்கிய சூழ்நிலை. மனக்கஷ்டங்களை பகிர்ந்து கொள்ள மறுக்கும் வெட்கமாகக் கருதும் அறியாமை மிக்க மனோநிலை துன்பங்களை நிரந்தரமானதாக்கி விடுகிறது.

நாம் வாழும் நாட்டின் கலாசார நல்ல அம்சங்களை உள்வாங்கி கலாசாரத்திற்கு மாறான, ஆனால் வாழும் சூழலின் ஆக்கிரமிப்பால் பிள்ளைகள் நாடி நிற்கும் அக்கலாசாரத்தின் விருப்பங்களை அடியோடு தகர்க்க நினைக்கும் பெற்றோரின் மனநிலை மாற வேண்டிய கட்டாய நிலைமை! இம்மாற்றத்தை ஏற்க மறுக்கும் பட்சத்தில் பிள்ளைகளுடனான உறவு முறிதலாக முடிவடைகிறது. இந்நாட்டின் வாழ்வு நிலைக்கேற்ப பிள்ளைகளுக்கான பாதுகாப்புக் கருதி வரையறுக்கப்பட்டுள்ள சட்டங்கள் எம் பெற்றோரின் அன்பான கண்டிப்பையும் ஆபத்துக்குள்ளானதாக்குகிறது. இச் சட்டங்களின் தன்மைகளை உதாசீனப்படுத்தாது அவற்றைத் தெரிந்து கொள்வதால் பிள்ளைகளின் வளர்ப்பு, கண்டிப்பு என்பன ஆரோக்கியமான முறையில் மேற்கொள்ள முடியும். இம் மனோநிலையை வளர்ப்பதால் இவ் வளமுள்ள நாட்டின் முன்னேற்றகரமான நெறியாள்கைகள் எம்மையும் உத்தமர்களாக்கும். நாம் எதிர்பார்க்கும் எமது சமுதாயத்தின் கற்றோர் செறிவும் எம்மை நல்ல மனிதர்களாக இந் அந்நிய நாட்டில் தலைநிமிர்ந்து வாழவைக்கும் என்பதில் ஐயமில்லை.

''செய்யும் தொழில் தெய்வம்'' என்ற பொன்னான வாக்கின் அர்த்தத்தை உணரும் வேளை மனிதனை மனிதன் மதிக்கும் கற்றோர் பண்பாடும் இங்கு ஆட்சி செலுத்தவில்லையெனின் எம் போன்ற அந்நியரின் வாழ்வும் சூனியமாகிவிடும். எனவே கிடைத்த சந்தர்ப்பத்தை எமக்குப் பயனுள்ளதாக்குவதோடு எம் நாட்டின் தேவைக்கும் அனுசரணையாக்கிக் கொள்வோம்.

பழைய மாணவன்
சந்திரசேகரம் இரவிச்சந்திரன்
லூசேர்ன்
சுவிற்ஸலாந்து.

# முதுமைவாழ்வில் எங்கே நிம்மதி என்று தேடிப்பார்க்கும் மனது



பிறந்த இடம் புகுந்த இடம் என்பது பெண்களுக்குத்தான் உண்டு என்று நாம் நினைத்திருந்தது இலங்கைத் தமிழர்களைப் பொறுத்த வரை மலையேறிவிட்டது. பெரும்பான்மை இலங்கைத் தமிழரைப் பொறுத்தவரை ஆண், பெண் பேதமின்றி பிறந்த இடம் புகுந்த இடம் அதாவது பிறந்த நாடு புகுந்தநாடு என்ற நிலை வந்து விட்டது.

ஆம்! நாம் எமது பிறந்த தேசத்தில் வாழ்ந்த அந்த ஒரு காலங்களை எண்ணிப்பார்க்கும் போது அந்த நாட்களில் ஊருக்கு ஒருவரோ இருவரோ விரல் விட்டு எண்ணுமளவில் சிங்கப்பூர் பென்சனியர் வாழ்ந்தனர். ஆனால் காலத்தின் கோலத்தாலோ அல்லது எமது நாட்டில் ஏற்பட்ட வேண்டாத அனர்த்தங்களாலோ நாம் கூட என்றாவது ஒருநாள் ஏதோ ஒரு புலம்பெயர் தேசத்தின் பென்சனியராக்கப்படுவோம் என்று கனவிலும் கூட எண்ணியிருக்கவில்லை. நாடு கடந்து சுவிசிலும் மற்றும் பல ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்க நாடுகளிலும் பல கண்டங்களிலும் தமிழர் கால்பதித்து கால்நூற்றாண்டு வேகமாகக் கரைந்து விட்டது. சுவிசில் வாழும் நாம் நிரந்தரமாக கால்பதிக்காது விட்டாலும் கிடைத்த தொழிலைச் செய்து அது கொடுத்த பணத்தைபெற்று சூழலுக்கேற்ப வாழப் பழகிவிட்டது எமது வாழ்க்கை.

எமது சுவிஸ் வாழ்க்கைச் சக்கரத்தை கொஞ்சம் சுழற்றிப்பார்ப்போமா? இங்கு கால்பதித்த முதலாவது சந்ததியினரான எமக்கு பிறந்த நாட்டிலுள்ள திடமில்லாத அரசியல் அவலங்களால் அவதியுற்ற அந்த வாழ்க்கை கொடுத்த வடுக்கள், எமது முதுமைக்காலம் எப்படி அமையப்போகிறதோ என்ற ஏக்கத்தை தூண்டி நிற்கிறது. இங்கு பிறந்து இங்கு பாடசாலைகளில் கல்விகற்ற எமது இரண்டாவது தலைமுறையினர் தமது இரட்டைக் கலாசாரத்தில் எதைக் கைக்கொள்வது என்று தெரியாது தட்டுத்தடுமாறி பெற்றோருடன் ஏற்படும் மனவேறுபாடுகளினால் வழிதெரியாமல் தவிக்கிறார்கள். ஒரு சரியான முடிவை எடுக்க முடியாமல் கழுத்தை இறுக்கும் பொருளாதார அரக்கன், மனித உணர்வுகள் மரணித்து இயந்திர வாழ்வு தொடர இளவயதிலேயே பற்றிக்கொண்ட இனம் புரியாத நோய்கள். அச்ச உணர்வுகளும் மன அழுத்தங்களும் ஏக்கங்களும் எம்மை ஆக்கிரமிப்புச் செய்தது தான் பல வித நோய்களின் தாக்கத்திற்கு மூல காரணம் என்று கூறமுடியும். இவ்வித வேண்டாத மனித உணர்வுகளைத் தூண்டும் ஓமோன் சுரப்புகள் மூளைக் கலங்களை பாதிப்படையச் செய்கின்றன. இதன் வெளிப்பாடுகள் தான் நீரிழிவு, இரத்தஅழுத்தம் போன்ற நோய்கள். இதற்கு நாம் விவேகமாகச் சிந்தித்து செயற்படாது வாழும் இவ்வெளிநாட்டு வாழ்க்கை முறையும் காரணமாகி விடுகிறது

சுவிற்ஸலாந்தில் வாழும் நாம் எமது கலாசார வாழ்வை உணர்ந்து அதன் தாற்ப்பரியங்களை அனுபவித்து வாழ்வேமேயானால் நாம் மிகவும் எடுத்துக்காட்டான

மகிழ்வான மனிதர்களாக வாழ முடியும். அதைவிடுத்து ஆசாபாசங்களுக்கு அடிமையாகி தகைமைகளிற்கு அப்பாற்பட்ட அந்தஸ்த்துக்களுக்கும் வரட்டுக் கௌரவங்களுக்கும் அடிமைப்பட்டு முடிவுகள் எடுக்கும்போதுதான் முன்பு குறிப்பிட்ட மன உளைச்சலுக்கு ஆளாகி நோயாளர்களாக வாழும் சூழ்நிலையும் அமைதியற்ற அவல வாழ்வும் தொடர காரணமாகின்றன.

வாழ்வு என்பது ''மகிழ்ச்சியுடன் கழிக்கப்பட வேண்டிய காலம்''. இதைத்தவிர வேறு எந்த வரைவிலக்கணமும் கொடுக்கப்பட முடியாது. சுற்றம், உறவு, சுதந்திரம், பணம், கௌரவம், பதவி, மனநிலை இவை மகிழ்ச்சியான வழங்கும் காரணிகளாக கொள்ளப்படும். முதுமையில் எமது எதிர்காலம் என அங்கலாய்க்கும் நாம் எம்முடன் உறவாகி உறைந்து போயிருக்கும் உணர்வான பிள்ளைகளுடன் வாழுதல், பிள்ளைகள் எம்மைக் கவனிப்பார்கள் என்ற நம்பிக்கையும் தளர்ந்து வருவதையும் தகர்க்கப்படும் அபாயப் புறச்சூழலில் அழுத்தங்கள் தோன்றியிருப்பதையும் அதற்கேற்ப முடிவுகள் எடுக்கப்படத் தயாராகி வருவதையும் காணமுடிகிறது.

பிள்ளைகள், சமூகவாழ்வு என்ற உணர்வு தகர்க்கப்படுமிடத்து முதுமையில் எமது எதிர்காலம்? எங்கே அமைதியோ அங்கேதான்! அமைதியும் அன்பும் எமது தேசத்தில் ஆக்கிரமிப்பு அரசியல் சிந்தாந்தங்களால் சீர்குலைக்கப்பட்டுள்ளது. அமைதியும் பாசமும் மகிழ்வான வாழ்க்கைக்கு அவசியம்.

தியானம், இறைவழிபாடு, மதங்களின் சித்தாந்தங்கள், மதகுருமாரின் நற்போதனைகள், போன்றன மனிதருக்கு அமைதியைக்கொடுக்கும் என்ற நம்பிக்கை இருந்தபோதும், இன்று உலகத்தில் உள்ள பல மதங்களின் குருமார், போதகர்கள் மக்களுக்கு ஒரு முகத்தையும் தமது இச்சைகளுக்கென தமக்கென தனியான ஒரு முகமூடிமுகத்தையும் வைத்துக்கொண்டு வாழும் இரட்டை வாழ்கைகள் பல ஆதாரங்களுடன் வெட்டவெளிச்சத்திற்கு வரும்போது அந்த நம்பிக்கைகளும் தவிடுபொடியாகி இங்குள்ள பலரது ஏக்கம்மிகு வாழ்வை மேலும் சீரழிக்கின்றன.

இவை யாவற்றிக்கும் உலகில் நிலைபெற்றுவரும் அரசியல் நிலைமைகளே முதன்மை பெறுகின்றன. எம்மைச் சூழ்ந்துள்ள செல்வாக்கு மிக்க பூகோள அரசியலில் இலங்கையும் சுவிற்ஸலாந்தும் நெருக்கமாக உள்ளதால் இங்கு நிகழும் பிரச்சினைகளை அனுபவ ரீதியாக உணர முடியும். முதுமையில் அமைதி வேண்டி நாம் தேடும் முடிவுகள் அமைதியான முதுமையைக் கொடுக்குமா?

- சொந்த வீடு
- காப்புறுதிப்பணவைப்புகள்
- பிள்ளைகள் மேல் கொண்டுள்ள நிகழ்கால நம்பிக்கைகள்
- நிச்சயப்படுத்தப்பட்ட ஓய்வூதியம்
- வாழ்விட நாட்டினதும், வாழ்ந்த, வாழ எதிர்பார்க்கும் நாட்டினதும் அரசியல் நிலைமைகள்

என்பவையே எமது முதுமைக் கால வாழ்விடத்தைத் தீர்மானிக்க நாம் தங்கும் காரணிகளாகின்றன.

**சுவிற்ஸலாந்தில் சொந்த வீடு :**

நிலவுடமை என்பது எமது வாழ்வில் இணைந்து இறுகிப்போன ஒன்று. எமது தேசத்திலிருந்து எம்முடன் புலம்பெயர்ந்து எம்முடன் கொண்டுவரப்பட்ட ஒன்று. அகதியாக

இங்கு காலூன்றியபோது மறைக்கப்பட்ட உணர்வு. இது மறக்கப்படாமல் இன்று தளிர்விட ஆரம்பித்துள்ளது. இவ் உணர்வு தமிழர்களின் ஒரு வித கௌரவப் பிரச்சினையாக பதிவு பெற்றுள்ளதாக, இவ் வாழ்வு பல அனர்த்தங்களுக்கும் காரணமாகி விட்டதையும் பல சம்பவங்கள் நிரூபித்து நிற்கின்றன. சுவிற்ஸலாந்தில் நிலவுடைமைச் சட்டவிதிகள் செல்வந்தர்களுக்கு ஏற்புடையதாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதையும் நாம் அறிவோமா? நாம் செல்வந்தர்கள்தானா? முதுமைக்கால வாழ்க்கைக்காக ஒதுக்கப்படும் ஓய்வூதியத்தை வீட்டிற்காக முதலிட்டால், இம்முதலீடு நாம் எதிர்பார்க்கும் முதுமைக்கால வாழ்வின் அமைதியையும் மகிழ்வையும் கொடுக்கும் முதலீடு ஆகுமா? அல்லது சொந்தவீட்டின் பகுதி உரிமையாளர் என்ற பணக்கார உணர்வுடனாலான ஏழை வாழ்வையா நிர்ணயிக்கும்?

**காப்புறுதி பணவைப்புகள் :**

சுவிற்ஸலாந்தின் மறுபெயர் காப்புறுதி என்று சொன்னால் கூட மிகையாகாது. இங்கு எதற்குக் காப்புறுதி இல்லை?. கதைப்பதற்கு, நடப்பதற்கு, உழைப்பதற்கு, உண்பதற்கு, கைக்கு, காதுக்கு, கண்ணுக்கு, பல்லுக்கு இப்படியே எதிர்கால முதுமைக்கால வாழ்விற்கு முதுமைக்கால வாழ்வு மகிழ்ச்சியாக அமையவேண்டும் என்று திணிக்கப்படும் முதலீடு இக்காப்புறுதிப் பண வைப்புகள்! ஆனால் எம் முதுமைக்கால வாழ்வுக்காலம் என்பது காப்புறுதி செய்யப்படாத நிலையில் தொடரும் வைப்புகளாக இருக்கின்றது.

இக்காப்புறுதிகள் மூலம் செய்யப்படும் முதலீடுகள் எமது முதுமைக்கால வாழ்க்கையின் வாழ்விடத்தை எவ்வாறு நிர்ணயிக்க வைக்கும்? அல்லது இக்காப்புறுதி முதலீடுகள் முதுமைக்கால வாழ்க்கைக்குப் போதுமானதா? எத்தேசத்தில் போதுமானது?

இது ஒருபுறம் இருக்க இக்காப்புறுதி வைப்புகள் இன்றைய பொருளாதார உத்தரவாதப் படுத்தப்பட முடியாத சூழ்நிலையிலும் பல்லாயிரக் கணக்கான கோடி சொத்துகள் கொண்ட நிதிநிறுவனங்கள் உடைந்து மண்ணாகிப்போகும் சூழ்நிலையில் இக்காப்புறுதிகள் பற்றிய கதைகள் எதிர்பார்த்த பணத்தைத் தருமா? அல்லது முதுமைக்கால வாழ்வில் போராட்டமா?

**பிள்ளைகள் மேல் கொண்டுள்ள நிகழ்கால நம்பிக்கைகள் :**

பிள்ளைகள்தான் எமது முதுமைப்பருவ காப்பாளர்கள் அல்லது ஆதரவாளர்கள். அவர்களுடன் எமது பிற்பகல் வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ளலாம் என்ற எமது கற்பனை எவ்வளவுதூரம் உண்மையாகும் என்று நாம் சற்று எண்ணிப்பார்க்கவேண்டும். நிகழ்காலத்தில் நாம், என்ன செய்கிறோம்??... ஒரு குழந்தை பிறந்தவுடன் இங்குள்ள பொருளாதாரச் சூழல் காரணமாக குழந்தையைக் காப்பகத்தில் விட்டு விட்டு குழந்தையின் எதிர்காலத்திற்காக என்று நொண்டிச்சாட்டு கூறிக்கொண்டு ஓய்வின்றி ஓடி ஓடி உழைக்கிறோம். எமது முதுமைக்காலம் அவர்களுடன் என்ற மகிழ்ச்சி பொங்கும் எமது கனவு எவ்வளவு தூரம் பலிக்கும் என்று எண்ணிப் பார்த்தோமானால், தமிழர் கலாசாரமான சமூகவாழ்வு என்ற நிலைமாறி பொருளாதார ஆதிக்கம் மிகுந்த அந்நிய கலாசார புறச்சூழலின் செல்வாக்கைச் சுவாசித்து வளரும் எமது பிள்ளைகள் எமது கனவை நனவாக்குவார்கள் என்று எண்ணி முதுமையில் நாம் ஏமாறாமல் தற்போதே அந்த ஆசைக்காக சிறந்த அத்திவாரம் இடப்படல் வேண்டும். பிள்ளைகள் ஆதரவாக இருந்தால் மகிழ்ந்து கொள்ளலாம் என்று நம்புவோம். இந்த நாட்டு பொருளாதாரக் கலாசாரத்தின் பெறுபேறுகளை கிரகித்து வளரும் எம் பிள்ளைகள் எதிர்கால நல்லறிஞர்களாக துலங்கும் வாய்ப்பினை பெற்றுக்கொடுத்து



உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி , உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் சுவிற்ஸலாந்து கிளை 2008ல் வானவில் நிகழ்வை கொண்டாடிய போது செயற்குழுவுடன் சர்வதேச ஒன்றிய இணைப்பாளர் கலாநிதி தம்பிராசா வந்தகுமாரும், இலங்கைப் பிரதிநிதி உடுவை எஸ்.தில்லைநடராசாவும் ஜேர்மன் பிரதிநிதி வி.அழகலிங்கமும் சேர்ந்து எடுத்த புகைப்படம்.

வரலாறு சரிவரப் பதியப்படாததால் புகழ்பூத்த பழைய மாணவர்களைப் பற்றி சரிவர அறிய முடியாமல் உள்ளது. எனினும் நிதானம், நேர்மை, திறமை மிக்க நாடாளுமன்ற உறுப்பினர் தா.இராமலிங்கம் யாழ்.பல்கலைக்கழக உபவேந்தராகக் கடமையாற்றிய மாமனிதர் பேராசிரியர் அ.துரைராஜா, உலகம் புகழ் விஞ்ஞானி க.கந்தையா, குற்றவாளிகளும் சட்டவல்லுநர்களும் மதித்துப் பாராட்டிய நீதியரசர் பொன்.ஸ்ரீஸ்கந்தராசா, அரச அதிபர் பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினர் எனப் பொறுப்பான பல பதவிகளை வகித்த சிவில் சேவை அதிகாரி ஆ.அருள்பிரகாசம், நீதி ஆணைக்குழுவில் கடமையாற்றிய கலாநிதி இ.மகாலிங்கசிவம், கலாநிதி கோபாலசுந்தரம் உட்பட பல பெருமக்கள் பயின்ற கல்விக் கூடங்களில் நாமும் படித்தோம் என்பது நமக்குப் பெருமை.

### வசதிகளற்ற நிலை

மின்சாரவசதி, குழாய்நீர்வசதி, கட்டிட வசதி என்பன இல்லாத அந்தக் காலத்தில் ஐம்பது வருடங்களுக்கு முன்பாக உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் தொலைவிட மாணவர்களுக்கு சிறு விடுதி ஒன்று இருந்தது என்பது பலருக்குத் தெரியாத செய்தி. கொழும்பைச் சேர்ந்த சுப்பிரமணியம், ராதாகிருஷ்ணன், ரங்கன், பசறையைச் சேர்ந்த மோகன், மலையகத்தைச் சேர்ந்த பழனிவேல், இராமசாமி திருகோணமலையைச் சேர்ந்த பாக்கியநாதன் ஆகியோர் விடுதியில் தங்கியிருந்து படித்த காலத்தைச் சேர்ந்த பழைய மாணவன் நான். பாடசாலை நாட்களுக்குப் பின்பு ராதாகிருஷ்ணன் கடற்படை அதிகாரியாகக் கடமையாற்றிய போதும் மோகன் கப்பல் கப்டனாகக் கடமையாற்றிய போதும் அவர்களைச் சந்தித்திருக்கின்றேன்.

ஓரளவுக்கு அடிப்படை வசதிகளுடன் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் மாணவிகளுக்கான விடுதி இயங்கியதும், மகளிர் கல்லூரி விடுதியில் தங்கிய மாணவிகள் ஆண்கள் கல்லூரியில் உயர்கல்வி பெறக்கூடிய வாய்ப்பை நிர்வாகத்தினர் திறம்பட ஒழுங்கு செய்திருந்ததும், சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே யாழ்ப்பாணத்துக்கு நீர், மின்சாரம் கிடைக்காத நிலையிலும் மின் பிறப்பாக்கி மூலம் கல்லூரித் தேவைகளுக்கு உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மின்சாரம் பெற்றதும் அக்காலத்தவர்க்கு நன்கு தெரியும்.

### சிறப்பு மிக்க கல்லூரி

சிங்கப்பூரில் செல்வாக்கோடு வாழ்ந்த கந்தையா தனது பிள்ளைகளைப் படிப்பிப்பதற்காகத் தெரிந்தெடுத்த கல்லூரி உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, மகளிர் கல்லூரி என்பது ஒரு சிலர் அறிந்த தகவல். அங்ஙனம் உடுப்பிட்டி உருவாக்கியவர்களில் ஒருவர்தான் இலங்கை இந்து மாமன்ற பொதுச் செயலாளரும் பிரபல சட்டத்தரணியுமான கந்தையா நீலகண்டன் பிரச்சனைக்குரிய காலத்தில் விசேட போக்குவரத்து ஒழுங்கு மூலம் வடபகுதி சென்று யாழ்ப்பாணத்துக்கு மின்சாரம் வழங்கியவர் ஆர்.முத்துரத்தினானந்தன். இப்படியாகப் பல மாணவ மணிகளைத் தந்த சிறப்பு எங்கள் கல்லூரிக்குரியது.

சாரணிய இயக்கம் எங்கள் கல்லூரிகளில் நன்றாகச் செயற்பாடுகளை ஆற்றியதால் 1955இல் அகில இலங்கைச் சாரணியக் கொடியை (Island Merit Flag) உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பெற்ற போது, நகரங்களில் அமைந்திருந்த பிரபல கல்லூரிகள் ஆச்சரியத்தில் ஆழ்ந்திருந்தன.

1957இல் லண்டனில் நடைபெற்ற World Jamboree நிகழ்வில் மகாராணியிடமிருந்து இராணிச் சான்றிதழைப் பெற்ற பெருமை பழைய மாணவர் பாஸ்கரலிங்கத்துக்குரியது.

அதுமட்டுமல்ல, 1966இலும் 1967 இலும் அடுத்தடுத்து மகாதேசாதிபதியிடமிருந்து அகில இலங்கை சாரணியக் கொடியைப் பெற்று சாதனையை ஏற்படுத்தியது.

ஒவ்வொரு வருடமும் முதலாந் தவணை பாடசாலை நாட்களில் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய பெற்றோர் தினக் கொண்டாட்டத்தைக் கண்டு மகிழ யாழ்ப்பாணத்தின் பல ஊர்களிலிருந்தும் மக்கள் திரண்டு வந்ததும் நினைவில் இருக்கிறத. பின்தங்கிய கிராமத்திலும் பரிசளிப்பு தினம் முழுக்க முழுக்க ஆங்கிலத்தில் நடைபெறும்போது ஆசிரியர்களின் இருமொழிப் புலமையும் மாணவர்களின் அபார ஆற்றலும் கண்டு வியந்திருக்கின்றோம்.

### மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப ஆசிரியர் நியமனம்

1962இல் அரசாங்கம் பாடசாலையைப் பொறுப்பேற்குமுன் நடைபெற்ற நிர்வாகத்தில் கல்லூரியை அடித்தளமாகக் கொண்டே ஆசிரிய நியமனம் (School Based Teacher Recruitment) நடைபெற்றது. மாணவர்களின் எண்ணிக்கையையும், தேவையையும் கருத்தில் கொண்டு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர்.

எமது ஊரையும் அயற் கிராமங்களையும் சேர்ந்தவர்கள் நியமனம் பெற்றதால் அவர்கள் இடமாற்றம், பதவி உயர்வென அமைச்சுகளிலும், அலுவலகங்களிலும் காலத்தைக் கழிக்கவில்லை. ஊரையும் ஊர் மக்களையும் நன்கு அறிந்திருந்ததால் வேதனத்துக்காக மட்டுமன்றி பற்று உறுதியுடன் சமூக வளர்ச்சிக்காக கிராம அபிவிருத்திக்காக கட்டுப்பாடாகவும் கண்ணியமாகவும் கடமையாற்றினார்கள்.

உதாரணமாக கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் படிப்பிப்பதற்கு அப்பாடங்களில் அதிகம் திறமைசாலிகள் நியமனம் பெற்றார்கள். இன்று ஒரு மொழியைச் சரியாகத் தெரியாதவர்கள் அம்மொழியைப் பயிற்றுவிப்பதாகவும், அடிப்படைத் தகைமைகள் குறைவாக உள்ளோர் ஆசிரிய சமூகத்தில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இன்னுமொரு வேடிக்கை சில கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கையை விட ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகம் என்று சொல்லப்படுகிறது.

அர்ப்பணிப்புடன் கடமையாற்றிய ஆசிரியர்களிடையே திறமை முதுமுறை, நிர்வாக ஆற்றல் உள்ளவர்கள் அதிபர்களாக நியமனம் பெற்றனர்.

உதாரணமாக அதிபர் கே.ரி.ஜோன் கடமையாற்றிய போது பிரதி அதிபராகக் கடமையாற்றிய எஸ்.எஸ்.செல்லத்துரை பின்னர் அதிபராக நியமிக்கப் பெற்றார். உதவி அதிபராக கடமையாற்றிய றொபர்ட் நவரத்தினமும் பின்னர் பிரதி அதிபராகி அதிபர் அந்தஸ்து பெற்றார். அதிபர் பதவிக்காக அவர்கள் யார் பின்னாலும் அலைந்ததாக நாம் கேள்விப்பட்டதேயில்லை.



உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கச் செயற்குழு
கனடா கிளை 2010

## உச்ச அளவு பயன்பாடு

எல்லோரும் மாணவர் நலனிலும் கல்லூரி அபிவிருத்தியிலும் அக்கறை காட்டியதால் மனித வளமும் ஏனைய வளங்களும் பாழாக்கப்படாமல் உச்ச அளவு பயன்படுத்தப்பட்டது.

இப்போது மீண்டும் இலங்கையில் School Based Teacher Recruitment Policy ஐ அமுலாக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பின்லாந்து, சுவீடன் போன்ற நாடுகளில் ஆசிரியர்களின் வருடாந்த வேதன ஏற்றத்தைக் கூட கடமைகளை மதிப்பீடு செய்து கூட்டியும், குறைத்தும் வழங்கக் கூடிய அதிகாரம் கல்லூரி நிர்வாகத்துக்கிருப்பதை நேரில் அவதானித்திருக்கின்றேன்.

இன்று கல்லூரி நேரங்களுக்கு முன்பாகவும் பின்பாகவும் விடுதலை நாட்களிலும் தனியார் கல்விக் கூடங்களுக்கு ஓடியோடி புத்தகம் சுமக்கும் நமது வாரிசுகளைப் பார்க்கிற போது அன்று கிராமத்தில் தோட்டங்களிலும் வயல்களிலும் வேலை செய்து படித்த மாணவர்கள், வீடுகளில் தேங்காய்ச் சிரட்டை சேகரித்து அகப்பை செய்து சுயதொழில் மூலம் சிறு தொகை சேகரித்து பொறியியலாளராக வந்தவர்கள், மாட்டெரு குப்பை கூழங்கள் சேகரித்து விற்றுப் படித்தவர்கள், ஆடு, மாடு, கோழி வளர்த்து வருமானம் தேடிய மாணவர்கள் என பலரைப் பார்த்திருக்கின்றோம்.

இரண்டாம், மூன்றாம் வகுப்பு மாணவனாக இருந்த காலத்தில் உயர் வகுப்பு மாணவிகளின் மதிய உணவு கால் றாத்தல் பாண், அதன் விலை ஏழு சதம். கடைக்குச் செல்ல வெட்கப்படும் மாணவிகள் பத்து சதம் தந்தால் ஏழு சதத்துக்கு கால் றாத்தல் பாணும் இரண்டொரு சதத்துக்கு சம்பலும் அவர்களுக்கு மிகுதி இரண்டொரு சதம் மிட்டாயாக மாறி எங்கள் வாயில்நெடுநேரம் கரையும்.

தடிப்பேனைகளையும், ஜி நிப்புகளையும் மைக்குப்பிகளையும் குமிழ் முனைப்பேனா விழுங்கி விட்டது.

கற்பலகையில் காற்றாடி படம் கீறி, அது பலமான காற்றால் நூலறுந்து போவதாகக் கூறி கற்பலகையை வீசி எறிந்து அடி வாங்கிய நாட்களையும் மறப்பதற்கில்லை.

வாழ்ந்த ஊரைப் பிரிந்து உலகில் எங்கெங்கோ ஓடி பயத்தாலும் வயிற்றுப் பிழைப்புக்காகவும் பல இடங்களைப் புகலிடமாக்கி உள்ளவர்களையும் பார்த்திருக்கின்றேன்.

சிலவருடங்களுக்கு முன் புலம்பெயர்ந்த உங்கள் உழைப்பால் எங்கள் நாட்டில் பல அடுப்புகள் எரிந்தன. வயிறுகள் நிரம்பின. தொடர்ந்த உங்கள் முயற்சியால்

இடிந்த கல்லூரிகளுக்குப் பதிலாக அமைக்கப்பட்ட தற்காலிகக் கொட்டில்கள் கட்டிடங்களாக மாறின. உடைந்த கரும்பலகைகளையும் முறிந்த வெண் கட்டிகளையும் கணினிகளும் நவீன கற்பித்தல் உபகரணங்களும் பதிலீடு செய்தன.

நூலக அபிவிருத்தி, விளையாட்டு மைதான அபிவிருத்தி என நீங்கள் காட்டிய அக்கறை எங்கள் நெஞ்சைத் தொடுகிறது.

உங்கள் உழைப்பால் அடுப்புகளில் நெருப்பு மட்டும் எரியவில்லை. கல்விக் கூடங்களில் அறிவுத் தீபமும் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது.

நீங்கள் உல்லாசமாக வாழாமல், ஊதாரித்தனமாகச் செலவு செய்யாமல் கல்வி அபிவிருத்தி, கல்விக் கூட வளர்ச்சி என்று கவனம் செலுத்துவதால் ஈழத்துக் கல்விச் சமூகம் என்றும் உங்களுக்குக் கடமைப்பட்டது; நன்றியுள்ளது.

கனடா, சுவிஸ் 'வானவில்' நிகழ்வுகள் வெறுமனே கலை நிகழ்வுகள் மட்டுமல்ல கல்வி வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி, சமூக வளர்ச்சி, பண்பாட்டு வளர்ச்சி எனப் பலவற்றை மையக் கருவாகக் கொண்டுள்ள மாபெரும் நிகழ்வு.

எதிர்காலத்திறவு கோலை வழங்கும் உங்கள் பங்களிப்பு வரலாற்றில் பதியப்படும். வழிகாட்டும் கலாநிதி தம்பிராஜா வசந்தகுமார், கிளைத் தலைவர் கணா. கணபதிப்பிள்ளை மற்றும் இரத்தினகுமார், விஜயதாஸ், ஜெகன், குலேந்திரன் உட்பட அனைவரையும் நெஞ்சாரப்பாட்டுகின்றேன்.

**நன்றி : வீரகேசரி வாரமலர்**

# சுவிஸ் நாட்டில் முதலாவது 'வானவில்' கலைவிழா

சுவிற்ஸலாந்து சூரிச் நகரில் ஈழத்துக் கிராமமான உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்ற பழைய மாணவர்கள் ஒன்று கூடி முதலாவது வானவில் கலை விழாவை 2006இல் நடத்தினார்கள்.

வடமராட்சியில் பல கிராமத்து மாணவர்கள் உயர்கல்வி பெற உதவிய கல்விக்கூடங்கள் சிறப்பித்து நடத்திய விழாவில் இலங்கை, கனடா, லண்டன், ஜேர்மனி உட்பட பல நாடுகளில் வாழும் புலம் பெயர்ந்தவர்கள் ஒன்று கூடி தங்கள் ஆற்றல் ஆளுமைகளையும் ஒற்றுமையையும் வெளிப்படுத்தினர். அறுபதுகள், எழுபதுகள் இரண்டு கல்லூரிகளுக்கும் பொற்காலமாகும். அக்காலங்களில் நீண்ட காலங்கள் அதிபர்களாக கடமையாற்றிய எஸ்.எஸ்.செல்லத்துரை, செல்வி ஆர்.ஜே.மான் ஆகியோரது பெயர்களையும் கல்லூரியின் சிறந்த பழைய மாணவர்களில் ஒருவராகவும் யாழ். பல்கலைக்கழக உபவேந்தராகவும் திகழ்ந்த மறைந்த மாமனிதர் பேராசிரியர் அ.துரைராசாவின் பெயரையும் அரங்குகளுக்கு சூட்டி மாணவ மாணவியர் தமது நன்றியறிதலைத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

யோ.அருண் தலைமையில் முதலாவது நாள் நிகழ்வுகளும் க.ராதாகுமார் தலைமையில் இரண்டாவது நாள் நிகழ்வுகளும் நடைபெற்றன.

அக வணக்கம், கல்லூரி கீதம் ஆகியவற்றுடன் ஆரம்பமான வானவில் நிகழ்வில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபர் க.தருமலிங்கம், பழைய மாணவர் சங்க செயலாளர் தி.யோகசாமி, பழைய மாணவரும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளருமாகிய உடுவை தில்லை நடராசா இலங்கை மின்சாரசபை பிரதிப் பொது முகாமையாளர் ஆர்.முத்துரத்தினானந்தன், லண்டனிலிருந்து சந்திரவிமலா ஸ்ரீதரன், இராசையா ஜெயராசா, தம்பிராசா உதயகுமார், ஜேர்மனியிலிருந்து பொறியியலாளர் வை.அழகலிங்கம், கனடாவிலிருந்து செல்வி. சீதா வேலுப்பிள்ளை, தங்கவேலாயுதம், எஸ். சின்னத்தம்பி, எம்.மோகனதாஸ், எஸ்.ரவீந்திரன் என பழைய மாணவர்கள் பலர் உட்பட ஆயிரத்துக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர்.

கடந்த காலங்களில் கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் ஆகியோரில் பத்துப் பேரைத் தெரிவு செய்து அவர்களது பெயரால் விருதுகள் வழங்கப்பட்டன. அங்ஙனம் கூறப்பட்டவர்கள் பேராசிரியர் அ.துரைராசா, விஞ்ஞானி க.கந்தையா, முன்னாள் அதிபர்கள் ஆர்.ரி.ஜோன், எஸ்.எஸ்.செல்லத்துரை, செல்வி.ஆர்.ஜே.மான், றொபட் நவரத்தினம், க.சிதம்பரப்பிள்ளை, சி.விநாயகமூர்த்தி, முன்னாள் ஆசிரியர்கள் வி.கே.ராஜரத்தினம், அருள் எம்பெருமான் ஆகியோர்.

நினைவு விருதுகள் தற்போதைய அதிபர்களான க.தருமலிங்கம், திருமதி குட்டித்தம்பி, பழைய மாணவர் சங்க காப்பாளர் எஸ்.மகாலிங்கம், இளைப்பாறிய பின்னரும் கல்லூரி மாணவர்களுக்கு அறிவு புகட்டி வரும் கோ.செல்வவிநாயகம். கே.சண்முகசுந்தரம், பழைய மாணவர் சங்க செயலாளர் தி.யோகசாமி. கல்லூரிகளின் நலன்களில் அக்கறை கொண்ட கலாநிதி த.வசந்தகுமார், பொறியியலாளர் ஆர்.முத்துரத்தினானந்தன், கணனியியலாளர் ஆர்.ஜெயராஜா, கலைஞர் எஸ்.தில்லை நடராசா ஆகியோருக்கு வழங்கப்பட்டன.

இரண்டு நாட்களும் திருமதி மதிவதனி சுதாகரனின் நட்டுவாங்கத்தில் திருக்கோணேஸ்வர நடனாலய மாணவிகளும் திருமதி ஞானசுந்தரி வாசனின் நட்டுவாங்கத்தில் ராதா நடனாலய மாணவிகளும் நடன நிகழ்ச்சிகளை வழங்கினார்கள்.

இந்தியா காரைக்குடி மிருதங்க வித்துவான் கிருஷ்ணமூர்த்தி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன புகழ் புல்லாங்குழல் மேதை பிச்சையப்பா ஞானவரதன் இணைந்து வழங்கிய ''சங்கீத சாகரம்'' பழைய மாணவர்களின் வாரிசுகளான செல்வி மீரா ரவீந்திரன், செல்வன் ஶ்ரீதரன் பிரசாந் வழங்கிய 'ராக சங்கமம்' பார்வையாளர்களின் பாராட்டுக்களைப் பெரிதும் பெற்ற நிகழ்ச்சிகளாகும்.

தொழிலதிபர்கள் 'சிகரம்' சதாசிவம் உபசாகரன், சிவா நிறுவன மனோ, வேலா நிறுவன வரதன் ஆகியோர் கலந்து சிறப்பித்த வானவில் விழாவையொட்டி சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது.

உடுவை தில்லை நடராசா தலைமையில் நடைபெற்ற புலம்பெயர்ந்த மக்கள் புகலிட வாழ்வில் கூடிய முக்கியத்துவம் தன்னாட்டு உணர்வுக்கு வழங்க வேண்டுமா அல்லது பொருளாதார முன்னேற்றத்துக்கு வழங்க வேண்டுமா அல்லது பண்பாடுகளைப் பேணுவதற்கு வழங்க வேண்டுமா என்ற முக்கோண பட்டிமன்றத்தில் கனடா பொன்.விவேகானந்தன், கலாநிதி த.வசந்தகுமார், சுவிஸ் கணா.கணபதிபிள்ளை ஆகியோர் கலந்துகொண்டு சபையைக் கலகலப்பாக்கினார்கள்.

பழம்பெரும் கலைஞர் ஜெயவீர சிங்கத்தின் நடனமும் காமதேனு கல்விக் கழகத்தினரின் நாடகமும் கண்ணகி கல்வி நிலையத்தின் வில்லுப்பாட்டும், அரட்டை அரங்கும் இடம்பெற்றது. ஜனரஞ்சகமான நிகழ்ச்சிகளை ஆசிரியைகள் சிவசுப்பிரமணியம் ஶ்ரீசேனாவும், திருமதி அம்பிகா ராஜலிங்கமும் தயாரித்து வழங்கினார்கள்.

இரு நாள் வானவில் நிகழ்வுகளும் கலாநிதி த.வசந்தகுமாரின் வழிகாட்டுதலுடன் சுவிஸ் கிளைத் தலைவர் கணா.கணபதிப்பிள்ளை, உபதலைவர்கள் விஜயகாந்தன், ரத்தினகுமார், எஸ்.கணேசதாஸ், செயலாளர் பெரிய தம்பி ஜெயநாதன், பொருளாளர் கு.ஜெயசீலன் ஆகியோர் உட்பட பழைய மாணவ மாணவிகளின் முழுமையான பங்களிப்புடன் சிறப்பாக நடந்தேறியது.

நன்றி : வீரகேசரி வாரமலர்

# Mutuo AG Kredit

Clarastrasse 19, 4005 Basel Tel: 061 692 57 87 Fax: 061 692 57 77

## சுவிஸ் வாழ் தமிழ் மக்களே!

எங்கள் மூலம் நீங்கள் குறைந்த விகித வட்டியிலே கடன் பெற்றுக் கொள்ள முடியும் என்பதனை அறியத் தருகின்றோம்.
எமது சலுகைளை அறிந்து கொள்ள நேரடியாக எம்மை நாடுங்கள்!

Mutuo AG 30 ஆண்டுகள் வங்கி கடன்

உங்களுடைய குடும்ப அங்கத்தவர்களின் வருமானத்தை சேர்க்கும் சாத்தியங்கள் இருந்தால் அதிகமான தொகை வழங்க முயற்சிப்போம்.

விரைவில் கட்டி முடித்தால் கட்டிய வட்டியில் இருந்து ஒரு தொகை மீளப் பெற்றுத் தரப்படும்.

B/C/G/L உடன் CH - வதிவிட உரிமை உள்ளவர்களுக்கு மட்டுமே கடன் உதவி வழங்கப்படும்.

முக்கிய அறிவிப்பு: நீங்கள் முதலே கடன் பெற்று இருந்தால், நாங்கள் உங்கள் வட்டி விகிதத்தை குறைக்க உதவுகிறோம்!

நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவர்
நிருஜா செல்வரட்ணம்

எமது முகவரி : Mutuo AG
Clarastrasse 19
4005 Basel
☎ 061 / 681 83 15
061 / 692 57 87
Fax 061 / 692 57 77

**8,4 %**
விகிதத்தில் இருந்து...

## விகித விபரங்கள்

| கடன் தொகை | 36 மாதம் செலுத்த வேண்டிய தொகை | 36 மாதத்திற்கான வருட வட்டி | 48 மாதம் செலுத்த வேண்டிய தொகை | 48 மாதத்திற்கான வருட வட்டி | 60 மாதம் செலுத்த வேண்டிய தொகை | 60 மாதத்திற்கான வருட வட்டி |
|---|---|---|---|---|---|---|
| CHF 20,000.00 | CHF 633.65 | CHF 2,811.40 | CHF 495.35 | CHF 3,776.80 | CHF 412.75 | CHF 4,765.00 |
| CHF 30,000.00 | CHF 934.65 | CHF 4,218.00 | CHF 743.00 | CHF 5,664.00 | CHF 619.10 | CHF 7,146.00 |
| CHF 40,000.00 | CHF 1,235.65 | CHF 5,624.60 | CHF 990.65 | CHF 7,551.20 | CHF 825.50 | CHF 9,530.00 |
| CHF 50,000.00 | CHF 1,584.20 | CHF 7,031.20 | CHF 1,238.35 | CHF 9,440.00 | CHF 1,031.85 | CHF 11,911.00 |
| CHF 60,000.00 | CHF 1,901.00 | CHF 8,436.00 | CHF 1,486.00 | CHF 11,328.00 | CHF 1,238.25 | CHF 14,295.00 |
| CHF 70,000.00 | CHF 2,217.85 | CHF 9,842.60 | CHF 1,733.65 | CHF 13,215.20 | CHF 1,444.60 | CHF 16,676.00 |
| CHF 80,000.00 | CHF 2,527.00 | CHF 10,972.00 | CHF 1,973.00 | CHF 14,704.00 | CHF 1,643.00 | CHF 18,580.00 |
| CHF 90,000.00 | CHF 2,843.00 | CHF 12,348.00 | CHF 2,220.00 | CHF 16,560.00 | CHF 1,848.00 | CHF 20,880.00 |
| CHF 100,000.00 | CHF 3,159.00 | CHF 13,724.00 | CHF 2,467.00 | CHF 18,416.00 | CHF 2,054.00 | CHF 23,240.00 |

Jahreszine Zwischen 8.0% bis 11.9 % pro Jahr
Jahresgesamtkosten z.B fur 10,000 - koster Fr. 522.20 bis Fr. 622.20 per Monat
Kredivergabe ist verboten, falls Sie zur Uberschuldung fuhrt.



கர்நாடக முறையிலும் ஆங்கில மேஜர், மைனர்
முறையிலும் கீபோர்ட் கற்பிக்கப்படும்.
❖ சினிமா 35mm digital film,
❖ Copy
❖ Film fx
❖ Boost (DIM)
❖ FAZ HDD
❖ Ton & DTS
❖ FCP Editing
K.S. அருந்தவராஜா
043 377 88 64
அனைத்து வேலைப்பாடுகளும்
சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.




Muniyandi Villas
Indian & Ceylon Restaurant & Take Out
Zweiersrasse 55, 8004 Zurich, Switzerland
Tel : 0041 44 242 71 11 Mobile : 0041 79 678 41 20
உங்களின் வைபவங்கள் அனைத்திற்கும்
சுவைமிக்க உணவு வகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

# அரிவரி முதல் 'அட்வான்ஸ் லெவல்' வரை அறிவூட்டியவர்கள்

- உடுவை தில்லை

உண்மையாகவே நான் கொடுத்து வைத்தவன். மனதுக்கினிய கிராமிய சூழலில் அமைந்த உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் அரிவரி வகுப்பு முதல் அட்வான்ஸ் லெவல் வரையும் படித்து மாகாண கல்வியமைச்சிலும் மத்திய அரசாங்க கல்வியமைச்சிலும் கடமையாற்றும் வாய்ப்பைப் பெற்று இளைப்பாறிய பின்னும் படித்த கல்லூரியோடும் பக்கத்துப் பெண்கள் கல்லூரியோடும் தொடர்பு கொள்ளக் கூடியதாக வாழ்கின்றேன்.

அந்தக் கால நினைவுகளை மீட்டிப்பார்ப்பதில் ஒரு சுகம்! சுகமோ சுகம்!

ஆரம்பவகுப்பு 'அரிவரி வகுப்பு' என அழைக்கப்படும். வகுப்பாசிரியை 'நேசமணி அக்கா'. எங்கள் உடுப்பிட்டியூரைச் சேர்ந்த பெண் ஆசிரியைகள் சிறுவர் வகுப்புகளுக்கு வகுப்பாசிரியர்களாகக் கடமையாற்றினார்கள். எனவே உரிமையுடன் ஆசிரியைகளை 'அக்கா' என அழைப்பது வழக்கம். பக்கத்திலிருக்கும் பழைய மாணவனுக்கு அடி வாங்கிக் கொடுக்க விரும்பும்போது சிணுங்கிக் கொண்டே 'அக்கா இவன் நுள்ளுறான்' என்று சொல்லி அப்பாவிகளுக்கு அடி வாங்கிக் கொடுத்ததுண்டு, மற்ற மாணவர்கள் முறைப்பாட்டுக்காரராக நான் அடிவாங்கியதுமுண்டு.

அரிவரி வகுப்பில் நேசமணியக்கா, முதலாம் வகுப்பில் 'சின்னத்தங்கக்கா' - பார்க்கவே பயங்கரமான தடியுடன் வருவா. இரண்டாம் வகுப்பில் இராசம்மாக்கா. மேரியக்கா நாலாம் வகுப்புக்கு வந்த போது 'அக்கா' என ஆசிரியைகளை அழைக்க வெட்கப்பட்டோம். எனவே 'புஷ்பா ரீச்சர், ஆறாம் வகுப்பில் 'லீலா ரீச்சர்' சொல்லப் பழகிக் கொண்டோம். இன்று நினைத்தாலும் சிரிப்பு வருகிறது. ஏனென்றால் ஆங்கிலத்தில் 'Teacher' என்றால் பெண்கள் என்றும், 'Master' என்றால் ஆண்கள் என்றும் கருதி யாராவது ஆண் ஆசிரியர்களின் பெயரைச் சொல்லி 'Teacher' என்றால் அது பிழை என எண்ணினோம். பின்னர் எட்டாம் வகுப்புக்கு வந்ததும் 'மிஸிஸ் அருமைரத்தினம்', 'மிஸிஸ். இராமச்சந்திரன்', 'மிஸிஸ்.சிவராஜா', என்று சொல்லப் பழகிக் கொண்டோம். திருமணமான ஆசிரியைகளையும் அப்போது 'மிஸ்' ஆக்கிய பெருமை எங்களில் பலருக்குண்டு. பெயர்களால் மாத்திரமன்றி அவர்களின் திறமைகள், தகுதிகளாலும் அழைக்கப்பட்டார்கள். சிறுவர்கள் 'பாட்டக்கா' என்றாலும் சரி, சிறுபராயம் தாண்டியவர்கள் 'சங்கீத ஆசிரியை' என்றாலும் சரி, வளர்ந்தவர்கள் அது Music Teacher என்றாலும் சரி, அது செல்வி. சரஸ்வதி வைத்திலிங்கம் என்பவரையே அஃதாவது! திருமணமான பின் திருமதிசரஸ்வதி இராஜேஸ்வரன் என்பவரையே குறிப்பிடும். இது மட்டுமல்ல -

'கார் அக்கா' என்றால் மிஸிஸ்.இராமச்சந்திரன் அவர் தானாகவே காரோடி வருவார். அறுபதுகளின் ஆரம்பத்தில் உடுப்பிட்டியில் ஒரேயொரு லேடீஸ் சைக்கிள் என்ற நினைவு. அதில் பயணம் செய்தவர் 'சைக்கிளக்கா' என அழைக்கப்படும் மிஸிஸ் சிவராஜா. இவர்கள் இருவரும் சம்பந்தப்பட்ட பல நினைவுகள் பசுமரத்தாணி போல.....

எட்டாம் வகுப்பில் கணிதம் போதித்த திருமதி.இராமச்சந்திரன் மாணவர்கள் கணிதத்தில் சிறந்து விளங்க வேண்டுமென்பதற்காக சனிக்கிழமை ஒன்பது மணியிலிருந்து ஒரு மணிவரை விசேட வகுப்பு நடாத்துவார். தனது செலவிலே காருக்கு எரிபொருள் நிரப்பி தனது ஊராகிய கெருடாவிலில் இருந்து உடுப்பிட்டிக்கு வந்து படிப்பிப்பார். இன்று பாடசாலை நேரத்தில் 'ஐஸ்' அடித்து மாலை நேரத்தில் 'ரியூசன்' பணம் அறவிடும் ஆசிரியர்கள் அன்று இருக்கவில்லை. ஒரு சனிக்கிழமை கணிதவகுப்பு முடிந்ததும் பக்கத்திலுள்ள மகளிர் கல்லூரி விளையாட்டு மைதானத்தின் மதில் அருகே நன்கு காய்ந்திருந்த விளாத்தி மரம் எங்கள் கல்லெறிக்கு இலக்கானது. மரமேறக் கூடிய சிலர் மரத்திலிருந்து பெரிய விளாம்பழங்களைத் தெரிவு செய்யும் போது திருமதி.இராமச்சந்திரனின் கார் திடீரென்று வந்துவிட்டது. ''இனிமேல் சனிக்கிழமை வகுப்பு நடத்துவது என்றால் நீங்கள் ஒழுங்காக இருக்கவேண்டும். வகுப்பு முடிந்ததும் வீட்டுக்குப் போக வேண்டும் அல்லது நான் மேலதிக வகுப்பை நிறுத்த வேண்டும். என்ன செய்ய...?'' என்று எங்களிடம் கேட்டரர்.

கல்லெறிந்து களவாக மரமேறி விளாம்பழம் தின்னும் ஆசைக்கு முற்றுப் புள்ளி வைத்தோம். அதனால் அவர் தொடர்ந்தும் சனி வகுப்பு நடாத்த..... இன்று பலர் பொறியியலாளர்களாக தொழிலாற்றுகின்றனர்.

திருமதிசிவராஜா அழகாக ஆங்கிலம் படிப்பிப்பார். ஆங்கில பாடநேரத்தில் தமிழில் பேசினால் சொற்களின் எண்ணிக்கைக்கேற்ப தண்டப் பணம் அறவிட்டு அவ்வப்போது மாணவர் நலனுக்குப் பயன்படுத்தும் ஒழுங்கை மாணவர்கள் மூலமே செய்விப்பார். அவரது தூண்டுதலால் கல்லூரி நூலகத்தில் தூசி படர்ந்திருந்தது ஆங்கிலப் புத்தகங்கள் பலவற்றை நாங்கள் படித்து அங்கும் இங்குமாக பலவற்றைப் பொறுக்கினோம். கிறிஸ்தவ கல்லூரியில் திருமதி சிவராஜா துணை நின்ற பலத்தால் 1961ம் ஆண்டு சரஸ்வதி பூசையைக் கொண்டாடி அதிபரிடம் நன்றாக வேண்டியவர்களுள் (இன்றைய) அகில இலங்கை இந்துமாமன்ற பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டனும் நானும் அடங்குவோம். ஆனால் அடுத்த வருடம் அரசாங்கம் பாடசாலைகளைச் சுவீகரித்ததால் அதே அதிபர் சரஸ்வதி பூசையில் கலந்து கொண்டது காலம் மாற்றிய கதை. சரஸ்வதி பூசை கொண்டாடியத்துக்காக தண்டிக்கப்பட்ட மாணவன் பின்னர் அரசாங்க இந்து பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளராக நியமனம் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

அதிக நாட்கள் சிறிய வகுப்புகளின் தலைமை ஆசிரியையாகக் கடமையாற்றியவர் திரு.வேலுப்பிள்ளை. ரியூசன் வருமானமில்லாக் காலத்திலேயே சொந்தக் கார் வைத்திருக்கவும், சம்பளம் கொடுத்து சாரதியை வைத்திருக்கவும் ஆசிரியரின் சம்பளம் போதுமானதாயிருந்தது. திரு.பொன்னம்பலம், திரு.துரைராஜா ஆகிய ஆசிரியர்களும்

தமது காரில் கல்லூரிக்கு வருவதுண்டு. ஆர்.பொன்னம்பலம் மாஸ்டர், தில்லையம்பல மாஸ்டர், ஆனந்தராஜா மாஸ்டர் ஆகியோரின் ஸ்கூட்டர்களைப் பார்ப்பதிலும், கோள் மூட்டிகள் இல்லாதபோது அவற்றைத் தொட்டுப் பார்ப்பதிலும் ஒருவகைச் சுகம். நேசதுரை மாஸ்டர், மயிலிட்டி ரிபிஸியஸ் மாஸ்டர், ஏழாலை குணசிங்க மாஸ்டர் ஆகியோர் மோட்டார் சைக்கிளில் வந்து போனதையும் நினைக்கின்ற போது சுமார் 40 வருடங்களுக்குப் பின் வன்னியில் உயரதிகாரிகள் சாதாரண சைக்கிள் டயருக்கும் ரியூப்புக்கும் பட்ட அவலங்களும் மனக்கண்ணில் வந்து போகிறது.

நான் நாலாம் வகுப்பு சித்தியடையும் வரை அதிபராகக் கடமையாற்றியவர் திரு.கே.ரி.ஜோன். இவர் இந்தியாவைச் சேர்ந்த மலையாளி. மிகச் சாதாரணமான உடை, நடை, மெல்லிய சிரிப்புத் தவழும் முகம். இருப்பினும் கண்டிப்பும் கட்டுப்பாடும் மிக்கவர்.

அதிபர் ஜோன் காலத்தில் மாணவர்களுக்கு தலையிடி, வயிற்றுவலி வருவதில்லை. முதலுதவிப் பெட்டியில் காலாவதியாகாத மருந்து வகைகள் நிறையவே இருக்கும். இன்று ஆஸ்பத்திரிகளில் மருந்து பற்றாக்குறையும் காலாவதியாகிய மருந்துகளும் எனத் தெரிவிக்கும் பத்திரிகைச் செய்திகள். வருத்தத்தைக் காரணம் காட்டிக் கற்றலிலும் கற்பித்தலிலும் ஒதுங்கி விட முடியாது. நான் மேல் வகுப்புக்கு வரும் வரை பலவிடயங்கள் ஒழுங்காக நடந்தன. வருடம் ஒரு தடவை வயிற்றுப்பூச்சிகளுக்கு மருந்து என பேதி தரப்படும். பேதி மருந்து கசந்தாலும் ஒரு நாள் விடுதலையும் கல்லூரி சிற்றுண்டிச்சாலை நடாத்திய பரமசாமியின் ஓசித்தேநீரும் நல்ல ருசி, நெருப்புக் காய்ச்சல் பரவுவதற்கு முன் கல்லூரிக்கு வைத்தியப்பகுதியினர் வந்து தடுப்பூசி போடுவார்கள். அம்மை நோய் வருவதற்கு முன் 'பால்' கட்டுவார்கள். அதிபர் இவ்விடயங்களில் எல்லாம் நல்ல கவனம். அதுமட்டுமல்ல ஓய்வான வேளைகளில் ஒவ்வொரு ஒழுங்கைகளாலும் உலா வந்து மாணவர்களின் இருப்பிடம், பெற்றோர் விபரம், பின்புலம் எல்லாம் அறிந்து வைத்திருந்தார். இன்று சில ஆசிரியர்களுக்கு மாணவர்களைச் சரிவரத் தெரியாது என்பதை விட மாணவர்களுக்கு ஆசிரியர்களைத் தெரியாதிருப்பதாகவும் அறிய முடிகிறது.

அதிபர் ஜோன் இளைப்பாறிய பின் அதிபர் எஸ்.எஸ்.செல்லத்துரை, இவரது காலத்தில் உட்கட்டமைப்பு வசதிகள், ஆசிரியர் மாணவர்கள் எண்ணிக்கை அதிகரித்தன.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அதிபர் அறிவுரைகள் அடங்கிய பேச்சை நிகழ்த்துவார். உரைகளின் சில பகுதிகள் இன்றும் நினைவில்.....

''வீதிகளில் நடந்து செல்லும்போது கவனமாகச் செல்ல வேண்டும். வாகனத்தை ஓட்டிச் செல்லும் சாரதிகள் 'பைத்தியக்காரர்' என நினைத்துக் கொண்டு நீங்கள் தான் கவனமாகப் போக வேணும்'' அதிபரின் காரை அவரே செலுத்தி வருவதால் வளர்ந்த மாணவர்கள் வாய்விட்டுச் சிரித்தனர்.

செல்லத்துரை அதிபரின் முகம் முழுவதும் சிரிப்பால் மலர்ந்தது - ''நீங்கள் சிரிப்பதால் எனக்குக் கோபம் வராது. ட்ரைவிங் சீற்றிலை இருந்து காரை ஓட்டுகிறபோது என்னையும் சேர்த்துத்தான் சாரதிகள் பைத்தியக்காரர் எண்டு நினைச்சால் உங்களுக்கு ஆபத்தில்லை. பைத்தியம் வருகுது எண்டு நீங்கள் வழிவிட்டு விலத்தி நடக்கப் பழகிக் கொள்ளுங்கோ''.

ஐம்பது வருடங்களுக்குப் பின்பும் அதிபர் செல்லத்துரை சிரித்துக் கொண்டு பேசுவது போல ஓர் உணர்வு. வாகனங்கள் வகை தொகையின்றி பெருகி வீதி எங்கும் தாறுமாறாக ஓடினாலும் தனது மாணவர்கள் காயமின்றி வாழ வழி காட்டிய அதிபரை பழைய மாணவர்கள் சந்திக்கும்போது சிந்திப்போம்.

அதிபர் செல்லத்துரை பல்லை மெதுவாகக் கடித்துக் கொண்டு தடிக்கு வேலை கொடுப்பார். உதவி அதிபர் றொபேட் நவரத்தினம் ''கடிதென ஒச்சி மெல்ல...'' என்று திருக்குறளில் வருவது போல ''மடையா... மடையா... பேயா...'' என ஏசுவது பிரம்படியை விட உறைக்கும். புஷ்ப ரீச்சர் நாலாம் வகுப்பில் பெருவிரலாலும் ஆள்காட்டி விரலாலும் நுள்ளும்போது சதை பிய்ந்து விடுமே என்ற பயத்தோடும் நோவோடும் நிலத்திலிருந்து ஓரடி மேலே சென்று கீழே வந்தது, நுள்ளிச் சிவந்த பகுதிகளுக்கு எச்சிலை மருந்தாகப் பூசியதும் நல்ல நினைவு. தெல்லிப்பளையிலிருந்து நிலத்துக்கும் சைக்கிளுக்கும் நோகாமல் சைக்கிளோடி வரும் சிற்றம்பலம் ஆசிரியர் ''பிள்ளைகள்'' என்று மரியாதையாகத்தான் ஏசுவார். குற்றங்கள் கூடினால் ஆசிரியர் நீலகண்டனிடம் தான் சொல்லுவார். தண்டனை நீலகண்டன் மாஸ்டரினால் நிறைவேற்றப்படும். தடியால் விழும். மேசைக்குக் கீழே குனிந்து நிற்கச் சொல்லி எதிர்பாராத நேரத்தில் முதுகில் விழும். இரண்டு கைவிரல்களையும் கூட்டி வைக்கச் செய்து விரல்களிடையே பென்சில்களைச் செருகி வைத்து, எங்கள் கைகளை நாங்களே மேசையில் அடிக்க வேண்டும். விரல் மொழிகள் வலி சொல்ல முடியாது. வித்துவான் கனகசபை மாணவிகளுக்கு முன்னிலையில் கேலியாகச் சில கதை சொல்லி தண்டனை தந்துவிடுவார். தமிழ்மொழிச் சொற்களை சரியாகப் பிரித்தும் புணர்த்தியும் உச்சரிக்காவிட்டால் அர்த்தம் வேறாகி அவதிப்படலாம் என்பதற்கு வித்துவானின் கதை இது:-

''மின்சார வசதியில்லாத காலத்தில் கிராமத்து இளைஞன் குப்பி விளக்குடன் கடைக்குச் சென்று கடையிலிருந்த பெண்ணைப் பார்த்து ''ஐந்து சதத்துக்கு கொஞ்சலாம்பெண்ணே'' என்றால் பெண்ணுக்குக் கோபம் வராதா எனக் கேட்பார். ''சிறிதளவு மண் எண்ணை'' என்பது நல்லது. ''கொஞ்சலாம் பெண்ணே'' என்று சொல்லி கடைக்காரனிடம் மாட்டுப்படுவதைவிட என்பார். அந்தக் காலத்தில் ஒரு போத்தல் மண் எண்ணை இருபது சதம் என்பதை நினைவூட்ட விரும்புகின்றேன். இந்தத் தண்டனைகள் இல்லாவிட்டால் பெரும்பாலான மாணவர்கள் நல்ல மனிதர்களாக வந்திருப்பார்களா? அறிவையும் ஒழுக்கத்தையும் பெற்றிருப்பார்களா என்பது சந்தேகம் தான்.

ஆசிரியர் நீலகண்டனிடம் அடிவாங்கிப் படித்த தமிழ்மொழியும் என்போன்ற பலரை வாழவைக்கின்றது. அவர் சாரண ஆசிரியராகஇருந்தபோது தொண்டமானாறு

சிறார் சேமிப்புத்திட்டம்
ஆயுட்காப்புறுதி
ஓய்வூதியம்
மருத்துவக் காப்புறுதி
வாகனக் காப்புறுதி
வீட்டுக் காப்புறுதி
தனியார் காப்புறுதி
நிறுவனக் காப்புறுதி
அனைத்திற்கும்

சிறுவர்களுக்கான பல்வரிசைகளின் சீரமைப்புக்கான காப்புறுதி மாதாந்தம் SFr.2.00.-மட்டுமே. (நட்டஈட்டுக்கான செலவுத்தொகை SFr.15 000.00 ம் வரை 75%)

சிறுவர்களுக்கான விபத்துக்கான காப்புறுதி மாதாந்தம் SFr.4.90.- மட்டுமே. (இயலாமைக்கான நட்டஈட்டுத் தொகை SFr.700 000.00)

சிறுவர்களுக்கான உலகளாவிய மருத்துவக்காப்புறுதி மாதாந்தம் SFr.2.00.- மட்டுமே. (நட்டஈட்டுக்கான செலவிடும்தொகை SFr.100 000.00)

சிறுவர்களுக்கான மருத்துவத்தால் ஏற்படும் சிக்கல்களை தீர்க்க வழக்கறிஞர் காப்புறுதி மாதாந்தம் SFr.1.00.- மட்டுமே. (வழக்கறிஞர்களுக்கு செலவிடும் தொகை SFr.250 000.00)

சிறுவர்களுக்கான மருத்துவத்தால் ஏற்படும் சிக்கல்களை தீர்க்கும் காப்புறுதி மாதாந்தம் SFr.3.00.- மட்டுமே.

SUISSE Fair AG
Versicherungsberatung

மேலதிக விபரங்களை எமது முகவர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளவும்

Ihr Partner 041 486 15 15 & 079 270 55 91 www.sadana.ch info@sadana.ch


Apiraa Textile
அனைத்து ஆடை
தேர்வுகளுக்கும்
Stauffacher Str – 149,
8004 Zurich.
Tel : 043 2335454
Fax : 043 2439957
E-mail: kkannazh@hotmail.com


Segar Saloon
சேகர் சலூன்
Rehoboth GMbh
Rontgenstrasse 66,
8005 Zurich
Tel & Fax : 043 / 317 11 30
Mobile : 079 / 677 94 36
www.segar.ch

செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த உற்சவம். யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திரள்வதால் ஆலயத்துக்கு அருகாமையிலுள்ள கல்லூரிகளைச் சேர்ந்த சாரணர்களும் உதவிக்கு அழைக்கப்படுவது வழக்கம். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி சாரணர் இயக்க மாணவர்களோடு இணைந்து கொண்டு நானும் சென்றேன்.

நாங்கள் கூடாரம் அமைத்துத் தங்கியிருந்த இடத்துக்குச் சிறிது தூரம் தள்ளி வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரிச் சாரணர்கள் கூடாரம் அமைத்திருந்தார்கள். ஒருநாள் மதிய உணவுக்குப் பின் சாரண ஆசிரியர் நீலகண்டன் எங்களை அழைத்து, ''இன்று மாலை சிதம்பராக்கல்லூரி மாணவர்கள் உங்களுடன் கலந்து பழக வருகிறார்கள். சிநேகபூர்வமான விளையாட்டுகளும் இடம்பெறும்'' என்றார்.

சிதம்பராக்கல்லூரி மாணவர்களும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவர்களும் சம்பிரதாயபூர்வமான அறிமுகம் - விளையாட்டுகள் என்று ஈடுபட்டிருந்த வேளை, எங்கள் கல்லூரி சாந்தன், நீளமான கயிற்றைக் கொண்டு வந்தான். 'கயிறிழுத்தல் போட்டி'

முதல் தடவை எங்கள் கல்லூரிக்கு வெற்றி. இரண்டாவது தடவை கயிறிழுத்தல் ஆரம்பமான சிலவிநாடிகளில் ....''ஐயோ அம்மா'' என்று சாந்தன் விழுந்து விட்டான். சுற்றி ஒரு கூட்டம். உடனே சுறுசுறுப்பாகச் செயற்பட்டேன். ''சேர்! ஒரு கார் பிடிச்சு வரட்டோ?''

நீலகண்டன் ஆசிரியர் கோபித்தார். ''சத்தம் போடாமல் உன்ர வேலையைப் பார்''

நிலத்தில் விழுந்து கிடந்த சாந்தன் வலது கையால் வயிற்றைப் அமத்திப் பிடித்தபடி அலறினான். ''அம்மா...அம்மா...''

மைதானத்தில் மாலை நேர வெய்யில் சுட்டெரித்ததால் எல்லோருமாகச் சேர்ந்து சாந்தனை வேலியோர மர நிழலின் கீழே தூக்கிச் சென்றனர்.

எங்கள் கல்லூரி பெரிய மாணவர்கள் அமைதியாக இருந்து அவதானித்தபடி இருந்தனர். சிதம்பராக்கல்லூரி மாணவர்கள் சாந்தனைக் கேள்வி கேட்டு வயிற்றைத் தடவிக் கொண்டிருந்தனர். சுமார் பத்து நிமிடங்கள் கழித்து, சாந்தன் ஒருவாறு சமாளித்துக் கொண்டு எழுந்தான்., ''இப்ப கொஞ்சம் சுகம்''.

''ஆஸ்பத்திரிக்குப் போவமா?'' ஆசிரியர் நீலகண்டன் கேட்டார்.

''இவரும் ஒரு ஆசிரியரா? பத்து நிமிடத்துக்குப் பிறகு கேட்கிறார்'' ஆசிரியர் நீலகண்டன் மீது ஒருவிதமான வெறுப்பு எனக்கேற்படுகிறது.

அப்போது உயரமான மரத்தின் கிளையொன்றில் ஏறியிருந்து கீழே நடந்தவற்றைப் பார்த்துக் கொண்டிருந்த இராஜேந்திரனை ஆசிரியர் நீலகண்டனின் கண்கள் கோபமாக நோக்குகின்றன.

ஆசிரியரின் கோபம் ''உங்கை என்னடா செய்யிறாய்? இறங்கடா கீழை''

இராஜேந்திரன் விரைவாகக் கீழே இறங்க முயற்சிக்கும்போது, அவனது ஒருகால் மரக்கிளைகளுக்கிடையே சிக்குப்பட்டு விடுகிறது. அவனது அலறல் பயங்கரமாயிருந்தது. ''அம்மா...அம்மா...'' அதைவிடப் பயங்கரமாயிருந்தது ஆசிரியரது சத்தம் ''இறங்கடா...இறங்கடா...''

இராஜேந்திரன் அழுதான். ''ஐயோ சேர் கால் மடங்கியிடுத்து. இழுக்க முடியாமல் கிடக்கு'' நாங்கள் எல்லோரும் நன்றாகப் பயந்தோம்.

உடனடியாகச் சிதம்பராக்கல்லூரி மாணவர் இருவர் மரத்தில் ஏறினார்கள். ஒருவன் மரத்திலிருந்த வண்ணம் கயிற்றை மேலே எறியச் சொன்னான். இருவரும் கயிற்றில் ஓர் ஊஞ்சல் போலச் செய்து, அதில் இராஜேந்திரனை உட்கார வைத்து பத்திரமாகக் கீழே இறக்கினார்கள்.

''ஓரிடத்திலை கூட்டமாக நில்லாதையுங்கோ, சுத்தி வர நில்லுங்கோ. காற்று வரட்டும்'' என்று சொல்லிய வண்ணம் வேலியருகே சென்ற ஆனந்தன், 'அம்மா அம்மா' என்று பிடரியைக் கைவிரல்களால் தடவியபடி அழுதான். ''கம்பி வேலி சேர்... ஆணி குத்திப்போட்டுது'' ஆனந்தன் அழுதுகொண்டிருந்தான்.

சிதம்பராக்கல்லூரி மாணவன் ஒருவன் ஆனந்தனின் தலையில் ஆணி குத்திய இடத்திலுள்ள மயிர்களை விரல்களால் விலத்தி அடையாளம் வைத்து, 'கத்திரிக்கோலைக் கொண்டு வாங்கோ' என்றான்.

என்மனம் கவலைப்பட்டது. 'சாந்தன் வயிற்றுவலியால் அவதிப்படுகின்றான். இராஜேந்திரன் கால் மடங்கிக் கஷ்டப்படுகிறான், ஆனந்தன் தலையில் ஆணி குத்தி அவதிப்படுகின்றான் என்ன கஷ்டகாலம்?''

நான் கவலைப்படும் போது மாணவர்கள் பலர் சிரித்தார்கள். ஆசிரியர் நீலகண்டனும் சிரித்தார். சாந்தன், இராஜேந்திரன், ஆனந்தன் எல்லோரும் சிரித்தனர். விடயம் இதுதான் -

சாரணர்கள் முதலுதவி (First Aid)ப்பரீட்சையில் சித்தியடைய வேண்டும். சிதம்பராக்கல்லூரி மாணவர்கள் முதலுதவி அளிக்கத்தக்க அறிவையும் தகைமையையும் பெற்றுவிட்டனரா என்பதைச் சோதனை செய்வதற்காகவே விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. சாந்தன், இராஜேந்திரன், ஆனந்தன் எல்லோரும் பிரமாதமாக நடித்தனர். இவர்களின் நடிப்பை நிஜமென நினைத்துக் கார் பிடிக்க புறப்பட்டதை நினைக்க...

**Shut your mouth and behave like a fool rathar than open your mouth and prove that you are a fool.**

சாரணர் இயக்கம் என்றதும் சிறுவயதில் என்போன்றோரைக் குருளைச் சாரணராக்கிய P.B.L லீலவங்ஸ என்னும் பெயரையுடைய சிங்கள மாஸ்டர், 'மத்யூ' என்னும் மலையாள

ஆசிரியர். இளைப்பாறி வெகுகாலமாகியும் கல்லூரிக்கு சேவை செய்யும் செல்வவிநாயகம் ஆசிரியர், இரசாயனத்தைப் போதித்த சண்முகசுந்தரம் எல்லா நடவடிக்கைகளிலும் சேர்ந்து கொள்ளும் V.தம்பிராஜா ஆசிரியரும் நினைவில் வருகின்றனர்.

ஆசிரியர் கொல்வின் இரத்தினசிங்கம் சிகரெட் புகைத்து தான் வருத்தம் வாங்கியது போல மற்றவர்கள் கஷ்டப்படக்கூடாது என்பதற்காக அடிக்கடி அறிவுரைகள் வழங்குவார். வீட்டில் ஒருநூலகம் வைத்து மாணவர்களினதும் ஊராரினதும் வாசிப்புக்கு தீனி போட்டு வந்தார். அங்கே கிடைத்த பத்திரிகைத் தீனி என்னைப் போன்ற பலருக்கு பல வழிகளில் உதவியது.

எட்டாம் வகுப்பில் படித்தபோது, கல்லூரி மேடையில் லோங்ஸ் போட்டு நடிக்கும் முதலாளி வேடம் எனக்கு. அந்தக் காலத்தில் உயர்வகுப்பு மாணவர்களும் கட்டைக் காற்சட்டைதான் அணிவார்கள். ஒருவருக்கொருவர் தெரியாமல் ஊர் முழுவதும் நாடகத்தில் நான் போடுவதற்காக இரவல் வாங்கிய நீளக் காற்சட்டைகளின் எண்ணிக்கை இருபதுக்கு மேல். இதில் பின்பக்கம் கிழிந்தவை, முழுக்க அழுக்கானவையும் அடங்கும். 'உனக்கெண்டபடியால் சொல்லுறன் ஒரு ரகசியம். ஒருவருக்கும் சொல்லக்கூடாது ரகசியம். தில்லை பள்ளிக்கூட நாடகத்தில் லோங்ஸ் போட்டு நடிக்கிறான் ரகசியம்' என்று அம்மா பரப்பிய ரகசியத்தால் ஊரில் உள்ள கிழவிகள் உட்பட நாடகம் பார்க்கத் திரண்ட கூட்டம் உடுப்பிட்டி கிராம வரலாறு காணாத கூட்டம். நாடகத்தில் நான் பேசியது ஓரே ஒரு சொல் 'பார்க்கலாம்'.

அந்த ஆரம்பம் பின்னர் வானொலி தொலைக்காட்சியென விரிவடைந்து பழைய மாணவர் சங்க கொழும்புக்கிளை மூலம் லட்சக்கணக்கில் கல்லூரிக்கு நிதி சேர்க்கவும் அத்திவாரமாக அமைந்தது.

குழப்படி செய்து அதிபரால் பள்ளிக் கூடத்தை விட்டு வெளியேற்றப்பட்டதையும் குறிப்பிட வேண்டும். 1962ம் ஆண்டு ஆசிரியர் ஒருவருக்கு பேனாமையை தெளித்த காரணத்தால் அதிபர் என்னைக் கல்லூரியை விட்டு வெளியேற்றி, பெற்றோருடன் வந்து பாடசாலை விலகல் பத்திரத்தையும், பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தையும் பெற்றுச் செல்லும்படி உத்தரவு பிறப்பித்தார். பெற்றோருடன் சென்றபோது, ஆசிரியரிடம் மன்னிப்பு கோரினால் மறுபடியும் அனுமதிப்பதாகத் தெரிவித்த அதிபரிடம், ஆசிரியருக்கு நான்கு பக்கங்களில் நான் எழுதி கையளித்த கடிதப்பிரதியைக் கொடுத்தேன்.

தவறை உணர்ந்து விட்டான்; நன்றாகத் தமிழ் எழுதுகின்றான் என்று பெற்றோருக்குச் சொல்லிய அதிபர் மீண்டும் கல்லூரியில் அனுமதித்தார்.

அதே ஆண்டு இறுதிப்பகுதியில் 'மாணவன்' என்ற பத்திரிகையை அச்சிட்டு அதில் என் பெயரை ஆசிரியர் என்று குறிப்பிட்டு கடைகளில் விற்பனைக்கு விட்டு கல்லூரியிலும் உடுப்பிட்டியிலும் பரபரப்பை ஏற்படுத்தியபோது என்னைப் படிப்பித்த ஆசிரியர்கள் ஜேக்கப், துரைச்சாமி, ஜெயராஜா, S.A.குலேந்திரன், A.நேசதுரை ஆகியோர் என்னை ஆசிரியர் என்றும் Editor என்றும் அழைத்தபோதும் புகழ்ந்தபோதும் சற்று கூச்சமாக இருந்தது.

சஞ்சிகை அச்சிட்டு விற்பனை செய்த விடயத்தை மகளிர் கல்லூரி மாணவிகள் எனது தங்கைக்குச் சொல்ல தங்கை வீட்டில் தெரிவிக்க அம்மா பணம் கொடுத்து பத்திரிகை வாங்கி படித்ததும் ஒரு கதை.

ஏறக்குறைய விஞ்ஞானம், கலைப்பாடங்களைப் போதித்த எல்லா ஆசிரியர்களுக்கும் நான் மாணவனாக இருந்தேன். எப்படியென்றால் எட்டாம் வகுப்பு வரை சகல பாடங்களையும் தமிழ்மொழி மூலம் பயின்ற எமக்கு அதன் பின்னர் சகல பாடங்களையும் ஆங்கிலத்தில் படிக்க வேண்டிய கட்டாய சந்தர்ப்பம்.

ஆசிரியர்கள் - பெற்றோர் பார்க்கும்போது ஆங்கிலத்தில் அச்சாகிய விஞ்ஞான பாடப்புத்தகங்களின் பக்கங்களைத் திருப்பிக் கொண்டிருப்பேன். படித்தால் விளங்குவது குறைவு. கதைப்புத்தகங்கள் படித்ததும் - பத்திரிகைகளுக்கு கதை கட்டுரைகள் எழுதியும் நாடகம் நடித்ததும் உண்டு.

1961,1962,1963 என மூன்று ஆண்டுகள் பிறரை ஏமாற்றுவதாக எண்ணி என்னை நானே ஏமாற்றிக் கொண்டிருந்தேன். 1963 மார்கழி க.பொ.த (சா/த) பரீட்சை முடிவுகள் உறுதிசெய்தன. அந்த நாட்களில் க.பொ.த (சா/த) பரீட்சை ஆவணி மாத்திலும் மார்கழி மாதத்திலும் என வருடந்தோறும் இரண்டு முறை நடப்பதுண்டு. அதிபர் ஆசிரியர்களிடம் அனுமதி வாங்கி மூன்று வருடங்கள் படித்த இரசாயனம், பௌதீகம், உயிரியல். கணிதம் ஆகிய பாடங்களை ஒதுக்கிவிட்டு சரித்திரம், பூமிசாஸ்திரம், குடியியல், எண்கணிதம் ஆகிய பாடங்களை மூன்று மாதங்களுக்கு குறைவான காலப்பகுதியில் படித்து 1964ஆகஸ்ட் சோதனை எழுதினேன். திறமைச்சித்தியும், விசேட சித்திகளும் பெறுவதற்கு ஆசிரியத் தெய்வங்கள் காரணமானார்கள்.

1964 உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவனாக இருந்தபோது, பொது எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சை எழுதினேன். பரீட்சை முடிவு யாழ். இந்துக்கல்லூரியில் அட்வான்ஸ் லெவல் இறுதி ஆண்டில் இருக்கும்போது வெளிவந்தது. பத்தொன்பது வயது முதல் அறுபத்து மூன்று வயது வரை மொத்தமாக நாற்பத்து மூன்று வருடங்கள் அரசாங்க உத்தியோகம் பார்ப்பதற்கு என்னைத் தயார் செய்து அறிவூட்டிய ஆசிரியப் பெருந்தகைகள் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி ஆசிரியர்கள் என பதிவு செய்வது எனது கடமை.

சிலரது பெயர்கள், பல சம்பவங்கள் பதியப்படாததை உணர்கின்றேன். காலத்தால் முந்திப் பிந்தியவர்கள் பற்றிய குறிப்புகளும் இச்சிறு ஆக்கத்தில் காணப்படாவிட்டால் அவர்கள் என்னை மன்னிப்பார்கள் என்றும் நம்புகின்றேன்.

கிராமத்துக் கல்லூரியில் அறிவூட்டிய ஆசிரியர்கள் சொல்லித்தந்த

**'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து'**
**'பெருக்கத்து வேண்டும் பணிவு'**

எனப் பல சங்கதிகள் இன்னும் நல்ல நினைவில் உண்டு.

# Fast Printers




- Computer Typesetting
- Graphics Design
- Notices & Invitations
- Reports
- Offset Printing of Books
- Visiting Cards etc.

கொழும்பிலிருந்து சகல அச்சு வேலைகளையும்

- துரித கதியில்
- மலிவுக் கட்டணத்தில்
- உங்கள் மனநிறைவுக்கு அமைய மேற்கொள்வதற்கு

**Fast Printers : 289 - 1/2, Galle Road, Colombo - 06, Sri Lanka.**
**Tel : +94 11 2362312 Mob : +94 776449885 Fax : +94 112362312**
**(வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக)**



# VSN Gold
BY THEVA

JEWELLERY AND WORKSHOP

**Jewelmaking and Repairing**

VSN

Digital Video and Photography

Luisenstrasse 34, 8005 Zurich, Switzerland.
Phone : 0041 43 366 81 35
Mobile: 0041 79 655 39 99
E.mail: suvini41@hotmail.com

Video — 20 Years — Photo

| | | |
|---|---|---|
| Party Service – | Gifts – | Album Making |
| Decretion – | Cards – | TV programme Editing |
| Makeup – | Cake Icing – | DVD Cases |
| DJ.Sounds – | Lighting – | Software CD's |

# Solo movies
*Swiss – London – Sri Lanka – India*

Video – Photo – Audio - Kommunikationstechnik

Beberist str 24
4500 Solothurn
Switzerland

Tel: 032 621 52 90
078 733 30 76
e.mail : infor@solomovies.ch

**www.solomovies.ch**

# நன்றி நவில்கின்றோம்

## சுவிஸ் வானவில் 2010 நிகழ்வில்

- பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கலாநிதி த.வசந்தகுமார்.

- விசேட விருந்தினராக கலந்து கொண்ட ஆசிரியர்.கே. தங்கவடிவேல்.

- கௌரவ விருந்தினராக கலந்து கொண்ட திரு.வி. விஜயநாதன்

- நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கிய பழைய மாணவர் சங்க சுவிஸ் கிளைத் தலைவி திருமதி நந்திமலர் தர்மகுலசிங்கம் மற்றும் செயலாளர் கு.ஜெயசீலன், பொருளாளர் ந.புஸ்பராஜா, ஒருங்கிணைப்பாளர்கள் க.ராதாகுமார் (மதன்), அருண் யோகேந்திரா (பாபு), ஏனைய செயற்குழு உறுப்பினர்கள், காப்பாளர் திரு.இ.மகாலிங்கம்.

- சிறப்பு மலருக்கு ஆசிச்செய்திகள், வாழ்த்துச் செய்திகள், விடயதானம் செய்தவர்கள்.

- கவியரங்கிலும் பட்டிமன்றிலும் கலந்து கொண்ட அறிஞர்கள்.

- இசையரங்கு, நடன விருந்து, நாடக நிகழ்ச்சி ஆகியவற்றில் கலந்து கொண்ட கலைஞர்கள்.


- பொருளாதார உதவியளித்த வர்த்தகப் பெருமக்கள், நலன்விரும்பிகள்.

- நிகழ்ச்சிக்கு வருகை தந்து சிறப்பித்த பார்வையாளர்கள்
- வானவில் தொடர்பான விபரங்களை மக்கள் மத்தியில் கொண்டு சென்ற ஊடக நிறுவனங்கள், ஊழியர்கள், மண்டபம் தந்தும் ஒலி, ஒளி வழங்கியும் உதவிகள் புரிந்தோர்
- ஒரு வாரத்துக்குள் இலங்கையில் இம்மலரை அழகாக வடிவமைத்து அச்சிட்டு எமக்கு அனுப்பி வைத்த கொழும்பு Fast Printers நிறுவனம்
- வடிவமைப்பிலும் செம்மைப்படுத்தலிலும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கிய திரு.ந.வித்தியாதரன்
- மலர் விடயத்தொகுப்பில் உதவிய பழைய மாணவன் எஸ்.தில்லைநடராஜா

**ஆகியோருக்கு மனம் நிறைந்த நன்றிகள்!**



**கணா. கணபதிப்பிள்ளை**
**மலர்குழு சார்பில்**



Science Academy
கல் உயர் உதவு




# கணா மாஸ்டரின்
# கணிதவகுப்புக்கள்

**சுவிஸ் நாட்டின் பாடத்திட்டத்திற்கு**
**அமைய இலகு முறையில் கணிதபாடம்**
**2 ம் வகுப்பு முதல் 9 ம் வகுப்பு வரை**
**கற்பிக்கப்படுகிறது.**

கணிதவகுப்பு நடைபெறும் இடம்
Zürich நகரில்
Badenerstrasse 281
8003 Zürich

கணா மாஸ்டரின்
கணித வகுப்புக்கள் நடைபெறும்
ஏனைய இடங்கள்
Zürich, Schlieren, Oerlikon,
Winterthur, Schaffhausen, Luzern

பல மாணவர்களின்
வேண்டுகோளுக்கிணங்க
Gymi Prüfungen 6 Klasse Und 2.Sek, 3.Sek
வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

தொடர்புகளுக்கு
*Gana Master*
079 439 88 34

www.ads-graphics.ch Tel. 078 300 30 62

# 19 வது வருடத்தில்

# GK KRISHAN GmbH

மருத்துவக் காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி
வாகன காப்புறுதி
வங்கிக்கடன்
வீட்டுக்கடன்

## வெற்றிப் பயணத்தின் மகிழ்வில் சிறப்புத் திட்டங்கள்

1 மே 2010 முதல்
31 செப்ரெம்பர் 2010 வரை



நேரடியாக வந்து மருத்துவக் காப்புறுதி செய்யும் குடும்பத்திற்கு 300 CHF பணமாக வழங்கப்படும்.

நேரடியாக எமது நிறுவனத்தில் ஆயுட்காப்புறுதி பெறுபவர்களுக்கு முதல் இரண்டு மாத தவணைக் கட்டணம் பணமாக வழங்கப்படும்.

## எங்களது வழிமுறைகள் உங்களது இலாபத்தினை நோக்கி



Falkenweg 17, 6340 Baar
www.kavadithaya.com, Mail:gk2867@hotmail.com
Mob: 079 255 19 11, 079 912 71 67

Fast Printers : 289-1/2, Galle Road, Colombo - 06 T.P-0112362312.